# வானவில்

# VAANAVIL

| | |
|---|---|
| இதழ் 117 | புரட்டாதி 2020 |
| ISSUE 117 | SEPTEMBER 2020 |


# மாகாண சபைகளின் எதிர்காலம் என்ன?

# அரசாங்கம் விளக்கமளிக்க வேண்டும்!




**இ**லங்கையில் நடைமுறையில் உள்ள மாகாண சபைகளை ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற கருத்துக்கள் தற்போதைய அரசாங்கத்தின் ஒரு பகுதியினரிடம் இருந்து கிளம்பி இருக்கிறது. அதன் பொருட்டு 1987இல் செய்து கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விளைவாக அரசியல் அமைப்பில் மேற்கொள்ளப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தை நீக்க வேண்டும் எனவும் அவர்கள் கோருகிறார்கள்.

அவர்களது இந்தக் கோரிக்கை சம்பந்தமாக பிரதான எதிர்க்கட்சியான சஜீத் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியோ, ஐக்கிய தேசியக் கட்சியோ அல்லது ஜே.வி.பியோ கூட வாய் திறக்காது மௌனமாக இருக்கின்றன. ஏன் வடக்கு கிழக்கு தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கூட சிங்களப் பேரினவாதிகளின் இந்தக் கோரிக்கை பற்றி தமது வன்மையான எதிர்ப்பைத் தெரிவிக்காமல் ஆமை தலையை ஓட்டுக்குள் இழுத்து வைத்திருப்பது போல தலையை இழுத்து வைத்திருக்கின்றது.

இந்த மாகாண சபை முறைமை ஏன் கொண்டு வரப்பட்டது, என்ன சூழலில் கொண்டு வரப்பட்டது என்பதை மறந்துவிட்டது போல பெரும்பாலான அரசியல்வாதிகள் நடித்தாலும், பொதுமக்களும் மறந்து போய் இருப்பது கவலைக்குரிய விடயம்.

இலங்கை பிரித்தானிய காலனித்துவவாதிகளிடமிருந்து 1948 பெப்ருவரி 04ஆம் திகதி சுதந்திரமடைந்த பின்னர் ஆட்சியதிகாரம் ஏகாதிபத்திய சார்பு சிங்களப் பேரினவாதக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிடம் போய்ச் சேர்ந்தது. அந்தக் கட்சி செய்த முதல் வேலை மலையகத் தமிழத் தோட்டத் தொழிலாளர்களின் பிராஜாவுரிமையையும் வாக்குரிமையையும் பறித்ததுதான். அடுத்ததாகச் செய்த வேலை வடக்கு கிழக்கில் இருந்த தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஆரம்பித்து வைத்தமை.

இத்தகைய நடவடிக்கைகளை வன்மையாக எதிர்த்திருக்க வேண்டிய தமிழ் தலைமை (ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் காங்கிரஸ் கட்சி), அதற்கு பதிலாக அரசாங்கத்தில் அங்கம் வகித்துக்கொண்டு அரசின் தமிழின விரோத நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பு நல்கியது. எனவே இன்றைய தமிழ் தலைமுறையினர் தவறாக நினைப்பது போல சிங்கள அரசியல்வாதிகளால் மட்டும் இலங்கையில் இனப்பிரச்சினை வளர்க்கப்பட்டது அல்ல. இனப் பிரச்சினை உருவாவதற்கும், பின்னர் அது பூதாகர உருவம் எடுத்ததிற்கும் தமிழ் தலைமைகளும் காலத்துக்காலம் கைகொடுத்து உதவியிருக்கின்றன.

ஆனால் தமிழரசுக் கட்சி உருவான பின்னர் இனப்பிரச்சினை தமிழ் மக்களின் மையப் பிரச்சினையாகக் கொண்டு வரப்பட்டது. ஆனால் அதைத் தமிழரசுக் கட்சி தமிழ் மக்களின் ஒரு ஜனநாயகக் கோரிக்கையாக எழுப்புவதற்குப் பதிலாக சிங்கள விரோத, தமிழ் இனவாதக் கோரிக்கையாக முன்னெடுத்தது. அதன் விளைவாக தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கையை சிங்கள மக்களை ஏற்க வைப்பதற்குப் பதிலாக அவர்களை எதிர்த் திசையில் நிறுத்தி வைத்தது.

இருந்தும் 1956இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு எஸ்.டபிள்யு.ஆர்.டி.

**தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...**

**நூறு சிந்தனை மலரட்டும்**

# ஐக்கிய நாடுகள் சபை உருவாகி 75 வருடங்கள்

நியூயார்க்கில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 75வது வருடாந்த கூட்டத்தொடர் ஆரம்பமாகியுள்ளது. கொரானா தொற்றால் இம்முறைதான் முதன்முதலாக உலகத் தலைவர்கள் கலந்து கொள்ளாத கூட்டமாக இது அமைந்துள்ளது.

இந்த ஆண்டு தொடக்கத்தில் கோவிட்–19 உலகம் முழுவதும் பரவத் தொடங்கியதால் கோடிக் கணக்கான மக்கள் வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்கின்றனர். உலகப் பொருளாதாரம் பாரிய பின்னடைவை அடைந்துள்ளது. பல நாடுகள் இப்போது இரண்டாவது கோவிட்–19 அலையை எதிர்கொண்டுள்ளன. 193 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா. தற்போது நம்பிக்கைபூர்வமற்ற அமெரிக்காவிற்கும், தீரமிக்க சீனாவிற்கும் இடையே வளர்ந்து வரும் குரோதத்தை முகங்கொடுக்க போராடி வருகிறது.

அமெரிக்காவிற்கும் சீனாவிற்குமிடையே நிலவும் பூசல் காரணமாக, கோவிட்–19 இற்கு எதிராக போராடுவதில் கவனம் செலுத்துவதற்கு உலகளாவியதொரு போர் நிறுத்தத்திற்கு நாடுகளை அனுமதிக்கக்கோரிய ஐ.நா. செயலாளரின் வேண்டுகோளினை தீர்மானமாக நிறைவேற்ற 15 உறுப்பினர்கள் கொண்ட பாதுகாப்புச்சபை 3 மாதங்களை எடுத்துக் கொண்டது. ஜூலை $1^{st}$ திகதி நிறைவேற்றப்பட்ட இத்தீர்மானத்தின் பின்னரும் 21,000 பேருக்கு மேற்பட்டோர் யுத்தங்களில் கொல்லப்பட்டுள்ளதாக ஐநா வெளியிட்டுள்ள கடைசி அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் உலகப்போர் முடிவில் மற்றொரு உலகப்போர் நடைபெற்றுவிடக் கூடாது என மக்கள் அஞ்சத் தொடங்கினர். அவ்வாறு மீண்டும் ஒரு போர் மூண்டால் மனிதகுலம் தாங்காது எனக்கருதியதால் வலிமையான ஒரு அமைப்பு தேவைப்பட்டது. 1943 ஒக்டோபரில் அமெரிக்கா, சீனா, பிரித்தானியா, ரஷ்யா, ஆகிய நாடுகள் மாஸ்கோவில் ஒன்றுகூடி, உலகில் அமைதியை ஏற்படுத்த ஒரு தனி நிறுவனம் அமைக்கவேண்டும் என்று முடிவு செய்தனர். அதனைத் தொடர்ந்து 1945 இல் சான்பிரான்சிஸ்கோ மாநாடு நடைபெற்றது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு 1945 ஆம் ஆண்டு ஜூன் $26^{th}$ திகதி 50 நாடுகளின் பிரதிநிதிகள் ஐ.நா. சபையின் சாசனத்தில் கையெழுத்திட்டனர். 1945ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24 இல் ஐக்கிய நாடுகள் சபை அதிகாரப்பூர்வமாக நடைமுறைக்கு வந்தது. உலக நாடுகளில் அமைதியை நிலை நிறுத்துதல், நல்லுறவை வளர்ப்பது, ஏழை மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தல், வறுமை, நோய், எழுத்தறிவின்மை போன்றவற்றை ஒழிப்பது ஆகியவை ஐ.நா. சபையின் நோக்கங்களாக உள்ளன.

ஐ.நா. அமைப்புக்கு முன்னதாக இதுபோன்ற பல சர்வதேச அமைப்புகள் உருவாகியிருந்தன. அவற்றுள் முக்கியமானது முதல் உலகப் போருக்குப் பின் 1919 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட உலக நாடுகள் சங்கம் ஆகும். இந்த அமைப்பும் உலக சமாதானத்தை பேணுதல் என்ற பிரதான நோக்கத்தை கொண்டிருந்தது. இருப்பினும் அதனால் தனது செயல்பாட்டை வெற்றிகரமாக கொண்டு செல்ல முடியவில்லை. ஏனெனில் இதில் ரஷ்யா, ஜேர்மனி உட்பட பல நாடுகள் அங்கம் வகிக்கவில்லை. இதில் ஏற்பட்ட தோல்வியே இரண்டாம் உலகப் போருக்குக் காரணமாக அமைந்தது. இரண்டாம் உலகப் போரில் ஏற்பட்ட பேரழிவு காரணமாகவே அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, பிரான்ஸ், சீனா ஆகிய நாடுகள் முன்னின்று ஐ.நாவைத் தோற்றுவித்தன.

ஐக்கிய நாடுகள் சபையின் தற்போதைய பின்னடைவுகளுக்கு முக்கிய காரணங்களில் ஒன்றாக இருப்பது வீட்டோ அதிகாரம். இந்த அதிகாரத்தால் ஐ.நா. சபையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற, பாதுகாப்பு சபையிலுள்ள நிரந்தர அங்கத்துவ நாடுகளில் ஒன்று நிராகரிக்கும் பட்சத்தில், தீர்மானம் நிறைவேற்ற முடியாமல் போகும். இத்தனியுரிமை அதிகாரம் இந்த நிரந்தர நாடுகளுக்கு இருப்பதனால் இவை சுயநலப்போக்குடன் ஒரு நியாயமான தீர்மானமானாலும் எதிர்க்கின்றனர். அதேபோலவே நியாயமற்ற தீர்மானத்தை நிறைவேற்றாமல் தடுக்கவும் இந்த அதிகாரம் பயன்படுத்தப்படுகின்றது. இச்சபையில் மேற்கத்தைய நாடுகள் (அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ்) ஒரு பக்கமாகவும் ரஷ்யாவும், சீனாவும் மற்றுமொரு பக்கமுமாக முரண்பட்டு செயற்படும் போக்கு உள்ளது. இதனால் இச்சபையின் உருவாக்க நோக்கம் கேள்விக்குள்ளாகியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டு 3 ஆண்டுகளில், இன்று உலகின் மிகவும் மோசமான முறையில் நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இனங்களில் ஒன்றான பலஸ்தீனமக்களின் பிரச்சனைக்கும் அத்திவாரம் இடப்பட்டது. 1948 ஆம் ஆண்டு மே மாதம் $14^{th}$ திகதி பலஸ்தீனர்கள் வாழ்ந்த மண்ணில், ஐ.நாவே அந்த மக்களை ஆக்கிரமிப்பதற்கு ஏதுவாக இஸ்ரேல் என்ற நாட்டை ஐ.நா. உருவாக்கியது. பலஸ்தீன மக்களினதும், அவர்களது அரபு அண்டை நாடுகளினதும் ஆக்ரோஷமான எதிர்ப்புகளுக்கு மத்தியிலேயே இந்த அநியாயம் அரங்கேற்றப்பட்டது.

“உலகந்தழுவிய விவகாரங்களில் ஆதிக்கம் செலுத்தவோ, மற்றவர்களின் விதியைக் கட்டுப்படுத்தவோ அல்லது அபிவிருத்தியில் தனக்கு சாதகமானவற்றை பேணுவதற்கோ எந்த நாட்டிற்கும் உரிமை இல்லை. உலகின் மேலாதிக்க சக்தியாக, கொடுமை புரிபவராக அல்லது அதிபதியாக இருப்பதற்கும் தோற்றமளிப்பதற்கும் என்ன வேண்டுமானாலும் செய்வதற்கு ஒருவரை குறைந்தளவிலேனும் அனுமதிக்கக் கூடாது. ஒருதலைப்பட்சம் என்பது ஒரு முட்டுச்சந்தாகும்” என ஐ.நாவின் 75 வது நிறைவையொட்டி சீன அதிபர் ஜி ஜின்பிங் (Xi Jinping) பேசியுள்ளார்.

இரண்டாம் உலகப்போரில் இறந்தவர்களின் தொகை 8.5 கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் ஐ.நா. உருவாக்கப்பட்ட பின்னர் நாடுகளுக்கிடையேயான மற்றும் உள்நாட்டு யுத்தங்களில் இதுவரையில் குறைந்தது 4.5 கோடி மக்கள் உயிரிழந்துள்ளனர். கடந்த 75 வருடகால சகல மோதல்களுக்கு ஐ.நாவை நேரடியாகக் குற்றம் சொல்ல முடியாவிடினும், உலக நாடுகளில் அமைதியை ஏற்படுத்த முடியாத அமைப்பாக இருந்து வருகின்றது. எனவே ஐ.நா. மறுசீரமைப்புக்கு உள்ளாக்கப்படுவது தவிர்க்க முடியாதது.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

‘வானவில்’ இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்:

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ **இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.**

## கம்யூனிஸ்ட் மு.கார்த்திகேசன் அவர்களின் 43ஆவது ஆண்டு (1977-2020) நினைவாக -

# விளையாட்டிற் சுழற்சியும் சுழலும் விளையாட்டும்!


## (Spin in Sport and Sport in Spin)

பீக்கிங்கில் நடைபெற்ற ஆபிரிக்க – ஆசிய மேசைப் பந்தாட்டத்தில் பங்குபற்றிய இலங்கை விளையாட்டு வீரரான ஸ்ரான்லி ஜோசெப் சமீபத்தில் உலக மேசைப் பந்தாட்ட வெற்றிக் கிண்ணப் போட்டி பற்றி எழுதியபோது, உலக மேசைப் பந்தாட்ட சம்பியனான ஸி என்-திங் (Xi Enting) இந்தச் சின்னஞ்சிறு பிங்-பொங் பந்தில் பதினொரு விதமான சுழற்சிகளை ஏற்படுத்துகிறார் என்று குறிப்பிட்டிருந்தார்.

பூமி சரியான உருண்டை அல்லாத போதும் அது ஒரு மாபெரும் பந்து போலாகும். ஆகவே அது சுழல்வதென்பது கடினமானதொரு விடயமாகும். ஆனாலும் அது இரண்டு விதமான சுழற்சிக்கு மட்டுமே ஈடு கொடுத்துள்ளது. பௌதீக ரீதியில் ஜப்பானை சூரியன் உதிக்கும் நாடாகக் கொண்டு மேற்கு கிழக்காகவும், அரசியல் ரீதியில் நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. தலைமைப்பீடத்தை உலக அரசியலின் நவீன அச்சாணியாகக் கொண்டு கிழக்கு மேற்காகவும் சுழன்றது.

மேற்கு நோக்கிய அரசியல் போக்கு பல நூற்றாண்டுகளாக நிலவியது. இதில் வியன்னா, பாரிஸ், ஜெனிவா, லண்டன் போன்ற இதர தலைநகர்கள் சர்வதேசிய மாநாடுகளை நடாத்தி உலகின் தலைவிதியை நிர்ணயிப்பதாக இருந்தன. இந்தப் போக்கு இரண்டாம் உலக யுத்தம் வெடிக்கும்வரை ஒரு சில மிகமிக முக்கியமான பிரதிநிதிகள் பங்கேற்பதால் மேன்மேலும் உரமடைவதாய் இருந்தது. அமெரிக்க ஜனாதிபதி தனது நாட்டை விட்டு ஒருபோதும் அசையாதிருக்க, இதர நாடுகளின் தலைவர்கள் மேற்கு நோக்கி அவரைச் சென்று காண்பதாய் இருந்தது. அத்துடன் சமீப காலம்வரை மேன்மை தங்கிய புனித போப்பாண்டவர் வத்திக்கானிலிருந்து அசையவே இல்லை. அவரது அருளாசியைப் பெற கிழக்கிலிருந்த மக்கள் மேற்கு நோக்கி ரோம் நகருக்குப் பயணிக்க வேண்டியிருந்தது.

ஆனால் இன்றோ, போப்பாண்டவர், அமெரிக்க ஜனாதிபதி இருவருமே மிக அதிகமாக உலகைச் சுற்றி வருகின்றனர். போப்பாண்டவர் கட்டுநாயக்காவுக்கே



வருமளவுக்கும், அமெரிக்க ஜனாதிபதி வியட்நாம் வரையுமாவது போகுமளவுக்கும் அண்மைக் கடந்தகாலம் அமைந்திருந்தது.

ஆனால் ஒரேயொரு தலைவர் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக அசையவே இல்லை. அவர் அசையாமலே இருக்க முடிவு செய்துவிட்டார் போலும். அவர்தான் சீனத்தலைவர் மா சே-துங்.

இதனால் கடந்த சிறிது காலமாகப் பிரமுகர்களும், ஜனாதிபதிகளும், அரசியல்வாதிகளும், பிரதமர்களும் - நிக்ஸன், தனகா, ஹெய்லிசலாசி, திருமதி பண்டாரநாயக்கா போன்று இன்னும் பலர் - மாசேதுங்கைச் சந்திக்க பீக்கிங் செல்ல வேண்டியிருந்தது.

இது உண்மையிலேயே உலக அரசியலில் ஒரு புதிய போக்கு, ஒரு கிழக்குப் போக்கு. இது ஆச்சரியமானதுதான். ஆனால் உற்று நோக்கின் இது அதிகம் ஆச்சரியத்துக்குரியதல்ல. காரணம், இந்தத் தலைவர்களெல்லாம் ஒரு காலத்தில் மாலுமி திசையறி கருவி மூலம் உலகுக்கே சர்வதேசிய திசை பற்றிய அறிவை ஏற்படுத்திய ஒரு நாட்டுக்கே திரும்பச் செல்கிறார்கள்.

ஒருவர் கேட்கலாம், இந்த அரசியற் திசை மாற்றம், அதாவது இனிமேலும் மேற்கு நோக்கியதாயிராது, கிழக்கு நோக்கி இருப்பது எங்கே தொடங்கியதென்று. ஒரு போர்க்களத்திலா? இல்லை. ஒரு சர்வதேச மாநாட்டிலா? இல்லை. அப்படியானால் எங்கே? ஒரு அமெரிக்க மகன் ஒரு புறமும், ஒரு சீன மகன் மறுபுறமும் நிற்கும் ஒரு வெறும் மேசையிலேயே இது தொடங்கியது.

அவர்கள் ஆயுதம் தரித்திருந்தனரா? ஆம், முற்றுமுழுதாக ஆயுதபாணிகளாக... பிங்பொங் பந்தாட்ட மட்டைகளால்... அவர்கள் முன்பொரு புறமாய்ச் சுழன்று இப்போது மறுபுறமாய்ச் சுழலும் ஒரு பந்தின் மேல் நிற்கிறார்கள்.

(தோழர் மு.கார்த்திகேசனால் எழுதப்பட்ட ஆங்கில மொழியிலான இக்கட்டுரை இலங்கைக்கும் மக்கள் சீனக் குடியரசுக்குமிடையில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டியை நினைவுகூருமுகமாக யாழ்ப்பாண ஐக்கிய விளையாட்டு கழகத்தால் வெளியிடப்பட்ட டெனிஸ் நினைவு மலரில் இடம் பெற்றதாகும்.

தோழர் கார்த்திகேசன் அவர்களின் 25ஆவது ஆண்டு நினைவாக அவரது புதல்வியர்களில் ஒருவரான ஜானகி பாலகிருஸ்ணன் தொகுத்து வெளியிட்ட "கம்யூனிஸ்ட் கார்த்திகேசன்" என்ற தொகுப்பு நூலிலிருந்து இக்கட்டுரை நன்றியுடன் எடுத்துப் பிரசுரிக்கப்பட்டுள்ளது – வானவில்)

**எமது குறிப்பு:**
1949இல் மகத்தான தோழர் மாஓ சே துங் அவர்களால் தலைமை தாங்கப்பட்ட சீனக் கம்யூனிஸ்ட் கட்சியால் சீனாவில் சோசலிசப் புரட்சி வெற்றி பெற்றதைத் தொடர்ந்து அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவுகள் முறிந்து போயின. எதிரும் புதிருமாக இருந்த அந்த உறவுகள் அமெரிக்க ஜனாதிபதியாக நிக்ஸன் பதவி வகித்த காலத்தில் 1972ஆம் ஆண்டு மீண்டும் முழு அளவில் ஆரம்பமாகின.

இரு நாடுகளுக்கும் முழு அளவிலான இராஜதந்திர உறவுகள் உருவாவதிற்கு

தொடர்ச்சி 5ம் பக்கம் பார்க்க...

# பல நூற்றாண்டுகள் நீளட்டும் பாரதியின் நினைவு!




பாரதியின் நினைவு நூற்றாண்டு தொடங்கியிருக்கிறது. இந்த நூறு ஆண்டுகளில் தமிழ்க் கவிதையின் போக்கு எத்தனையோ மாற்றங்களைச் சந்தித்திருக்கிறது. அவற்றின் தொடக்கப் புள்ளியாக அமைந்தவர் பாரதி. தமிழில் திருக்குறளுக்கு அடுத்தபடியாக பாரதியின் வார்த்தைகளே மிகவும் அதிகமாக மேற்கோள் காட்டப்படுகின்றன. பாரதியின் கவிதை வரிகள் தொடர்ந்து புத்தக, பத்திரிகைத் தலைப்புகளாகவும் கட்டுரை, கதைத் தலைப்புகளாகவும் எடுத்தாளப்பட்டுவருகின்றன. இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு வார்த்தைகளை அள்ளி வழங்கும் அளவுக்குப் பாரதியிடம் மாபெரும் களஞ்சியம் உண்டு. தவிர, அவர் எழுதிய எத்தனையோ பாடல்கள் திரைப்படங்களிலும் இசைக் கச்சேரிகளிலும் தொடர்ந்து ஒலித்துவருகின்றன.

பெயர் சொன்னாலே உணர்வில் உற்சாகத்தை அளிக்கும் பெயராக பாரதியார் இருந்துவருகிறார். அவரது நினைவைப் போற்றும் இந்த ஆண்டில் தமிழ்க் கவிதையும் இலக்கியமும் சமூகமும் தம்மை ஒரு சுயபரிசோதனைக்கு ஆளாக்கிக்கொள்ள வேண்டியதும் அவசியம் என்றே தோன்றுகிறது. பாரதியார் பாடல்கள் இயற்றத் தொடங்கிய காலத்தில், யாருக்கும் புரியாதபடி செய்யுள்கள் இயற்றுவதே புலமையின் வெளிப்பாடு என்ற எண்ணம் வலுப்பட்டிருந்த காலம். அதை உடைத்து நொறுக்கி, எளிமையை முன்னிறுத்தியவர் பாரதியார். பாடுபொருள் எத்தனை தீவிரம் கொண்டதாக இருந்தாலும், அதைப் பாமரருக்கும் கவிதை வடிவில் கடத்திவிடலாம் என்று நிரூபித்தவர்.

பாரதியின் எழுச்சி என்பது சுதந்திரப் போராட்டத் தாக்கத்தால் மட்டும் உருவானதன்று. அன்றைய நாளில் மக்களைப் பீடித்திருந்த அறியாமைகள், பெண்ணடிமைத்தனம் ஆகியவற்றுக்கு எதிரானதும்கூட. கவிதையை அவர் அழகியலின் வெளிப்பாடாக மட்டுமே பார்க்கவில்லை, அதைச் சமூக மாற்றத்துக்கான ஓர் ஆயுதமாகவும் கையிலெடுத்தவர். பாரதி ஒரு பத்திரிகையாளராகவும் பணியாற்றியவர் என்பதால், அன்றைய உலகளாவிய நிலவரங்களையும் அறிந்து வைத்திருந்தார். அவர் தமிழில் எழுதினார் என்றாலும் அவரது கவனம் உலக அளவில் பரந்து விரிந்திருந்தது. இன்று உலகத்தையே கைகளுக்குள் இணையம் கொண்டுவந்திருக்கும் நிலையிலும் தமிழ்க் கவிஞர்களின் பாடுபொருட்கள் பெருமளவு அகவெளிக்குள்ளேயே சுழன்றுகொண்டிருக்கின்றன. சமகால நிகழ்வுகளின் பாதிப்புகள் தமிழ்க் கவிதையில் எதிரொலிப்பதும் அரிதாகவே நிகழ்கிறது.

தமிழ்க் கவிதை மரபில் வேர்பாய்ச்சியவர், அதன் புதுமையான வெளிப்பாட்டில் நாட்டம் கொண்டவர் மட்டுமல்ல பாரதி. தத்துவம், அரசியல் என்று மற்ற துறைகளிலும் அவரது அக்கறைகள் வேர்பாய்ச்சியிருந்தன. கவிதை உள்ளிட்ட இலக்கிய வடிவங்கள் யாவுமே பிற துறைகளின் அறிவு வெளிச்சத்தாலேயே மென்மேலும் பொலிவு பெறுகின்றன என்பதை நமக்கு உணர்த்திய முன்னோடி பாரதி. சொல்லை எரித்துச் சுடர் விளக்கேற்றியவர் அவர் அந்தச் சுடருக்கு நெய்யாய்த் தன் வாழ்வை ஊற்றியவர். அதனால்தான், காலம் பல கடந்தும் ஒளிவீசிக்கொண்டிருக்கிறது அந்தச் சுடர். இன்னும் வெகு காலம் அந்த ஒளி நமக்கு வழி காட்டும்!

**–இந்து தமிழ்**

## *குமுறிய எரிமலை - பொழிந்த தமிழ் மழை*

தமிழின் தனித்துவத்தைச் சுவைபட விளக்கிய மாபெரும் கவிஞர் சுப்ரமணிய பாரதி. இவரின் உணர்வெழுச்சியால் பிறந்த பல கவிதைகள், இந்திய சுதந்திரப் போராட்டக் காலத்தில் கனல் தெறித்தன. தனக்குள் எழும் கருத்துகளை சற்றும் அச்சமின்றி தெளிவுடன் எடுத்துரைத்தவர் பாரதி.

ஒரு கவிஞன் என்ற ஒற்றை வரியில் இவரின் செயல்பாடுகளை முடக்கிவிட முடியாது. சமூக ஆர்வலர், பத்திரிகையாளர், எழுத்தாளர், பாடலாசிரியர், சுதந்திரப் போராட்ட வீரர், தமிழ் மொழியையே தன் சுவாசமாகக் கொண்டவர், எழுச்சிமிகு சிந்தனைகளின் ஏகலைவன் என, பன்முகத்தன்மைகொண்ட தமிழர், பாரதி. இந்திய விடுதலைப் போரில் இவரின் தமிழ் பெரும்பங்காற்றியதன் காரணமாகத்தான் இவரை 'தேசிய கவி' எனப் போற்றிப் புகழ்ந்தனர்.

திருநெல்வேலி மாவட்டம் எட்டயபுரத்தில் சின்னசாமி ஐயர் – லட்சுமி அம்மாள் தம்பதிக்கு 1882 ஆம் ஆண்டு டிசம்பர் 11ந் திகதி பிறந்தார் சுப்ரமணிய பாரதியார். சிறு வயதிலேயே தமிழ் மொழி அறிவும் தமிழ் உறவுகள் மீதான அக்கறையும் இவரிடம் இருந்தது. தமிழ் மொழி மீதான சிந்தனைத் தெளிவும் பற்றும் வெகு விரைவிலேயே இவரை மாபெரும் புலவராக மாற்றியது. தன் 11ம் வயதிலேயே கவி புனையும் ஆற்றலையும் அறிவையும் பயிற்சியால் வென்றார் பாரதி. 1897ல் பாரதியின் இல்லறத்தில் இனியாளாக பங்குகொண்டார் செல்லம்மா.

தமிழ் மொழி மீதும், இலக்கியப் பணி மீதும் தணியாத ஆர்வம்கொண்டவர் பாரதி. தமிழ் மட்டுமின்றி ஆங்கிலம், சமஸ்கிருதம், வங்காளம், இந்தி என, பலவேறு மொழிகளைப் பயின்றார். 'சுதேசமித்திரன்' என்ற தமிழ்

பத்திரிகையில், 1904 ஆம் ஆண்டு முதல் 1906 ஆம் ஆண்டு வரை உதவி ஆசிரியராகப் பணியாற்றினார்.

இந்துக்களின் சுவாசமாக விளங்கும் பகவத் கீதையை 1912ல் தமிழில் மொழிபெயர்த்தார். பரத கண்டத்தின் மாபெரும் காவியமான மகாபாரதத்தின் ஒரு பகுதியை 'பாஞ்சாலி சபதம்' என்ற பெயரில் படைத்தார். கவிதைகள் புனைவதோடு சமுதாயக் கட்டுரைகளும் எழுதினார்.

சுதந்திரப் போராட்டத்தின்போது இவரின் கருத்துகளும் கட்டுரைகளும் கவிதைகளும் உணர்ச்சிப் பிழம்பாகவும், காட்டுக் கனலாகவும் எழுந்து விடுதலை உணர்வை அனைவரது உள்ளத்திலும் விதைத்தன. மக்கள் மத்தியில் விடுதலை விழிப்பு உணர்வை உருவாக்கியதில் பாரதி, பார் போற்றும் கவிஞரானார். இவரின் எழுச்சிமிகு உரையில் தமிழர்கள் விழிந்தெழுந்ததைக் கண்ட ஆங்கிலேயர், பாரதியின் பல்வேறு படைப்புகளுக்குத் தடைவிதித்து, அவரை சிறையில் அடைத்தனர்.

தமிழ் இலக்கிய ஆர்வலர்கள் மட்டுமின்றி, உலக இலக்கிய ஆர்வலர்களாலும் கொண்டாடப்பட்ட பாரதி, சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள பார்த்தசாரதி கோவில் யானையின் கால்களால் காயமடைந்து, உடல் நலிவடைந்து, 1921 ஆம் ஆண்டு செப்டம்பர் 11ந் திகதி உலகைவிட்டு பிரிந்தார்.

அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்–
அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை
வைத்தேன்
வெந்து தணிந்தது காடு–தழல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும்
உண்டோ?
தத்தரிகிட தத்ரிகிட தித்தோம்

**–தினமலர்**

---

**3ம் பக்கத்தொடர்ச்சி...**

முன்னர் சில நிகழ்வுகள் இடம் பெற்றன. முதலில் அதற்கு அடிகோலியது அமெரிக்க – சீன வீரர்களுக்கு இடையில் நடைபெற்ற 'பிங்பொங்' எனப்படும் மேசைப்பந்தாட்டமாகும். அதைத் தொடர்ந்து அப்போதைய அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹென்றி கீஸின்சரின் சீனாவுக்கான இரகசியப் பயணம் அமைந்தது. அந்த ஆரம்ப கால செயற்பாடுகளை மனதில் கொண்டே தோழர் கார்த்திகேசன் இக்கட்டுரையை எழுதியுள்ளார்.

# புலி ஆதரவாளர்கள் மீதான தடையை நீக்கும்படி மங்கள சமரவீர அழுத்தம் கொடுத்தார்!

**இ**லங்கையில் முன்னர் ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கத்தில் வெளிவிவகார அமைச்சராக இருந்த மங்கள சமரவீர தடை செய்யப்பட்ட புலி ஆதரவாளர்களில் பட்டியலிருந்து இருவரின் பெயர்களை நீக்கும்படி தன்னை வலியுறுத்தியதாக தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவரான லெப்டினன்ட் கேர்ணல் சம்மி அர்ஜூனா குமார தெரிவித்திருக்கிறார்.

ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளான அரச ஊழியர்கள் பற்றி விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னலையில் சாட்சியமளிக்கும் போதே புலனாய்வுப் பிரிவின் தலைவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

மங்கள சமரவீர அந்த தடை செய்யப்பட்டவர்களின் பட்டியலிலிருந்து நீக்கும்படி கோரிய இருவரும் அப்பொழுது லண்டனில் வாழ்ந்து கொண்டு புலிகளுக்கு பல வழிகளில் உதவி வந்த இம்மானுவேல் பாதிரியாரும், சுரேன் சுரேந்திரன் ஆகியோராவர்.

தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவர் மேலும் கூறியதாவது:
புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் தடை செய்யப்பட வேண்டிய புலி ஆதரவாளர்களின் பெயர்கள் அடங்கிய கறுப்புப் பட்டியல் ஒன்றைத் தயாரித்த நாம் அதை வெளிவிவகார அமைச்சரின் ஒப்புதல் பெறுவதற்காக பாதுகாப்பு செயலாளருக்கு அனுப்பி வைத்தோம். அப்பொழுது வெளிவிவகார அமைச்சர் கூட்டும் ஒரு கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு எமக்கு அறிவிக்கப்பட்டது.

அந்தக் கூட்டத்தில் வைத்தே புலி ஆதரவாளர்களான இம்மானுவேல் பாதிரியார் மற்றும் சுரேன் சுரேந்திரன் ஆகியோரின் பெயர்களை அந்தப் பட்டியலிலிருந்து அகற்றுமாறு அமைச்சர் மங்கள சமரவீர உத்தரவிட்டார். அந்த இருவரினதும் பின்னணி குறித்து நாம் விளக்க முற்பட்டபோது அதற்கு சமரவீர இடம் கொடுக்கவில்லை.

மங்கள சமரவீர அங்கு மேலும் கூறுகையில், "இது ராஜபக்சவின் ஆட்சியல்ல. எனவே கோத்தபாய ராஜபக்சவின் தேவைகளுக்காக நான் வேலை செய்ய வேண்டிய தேவையில்லை" என்று சொன்னார்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னிலிகொட காணாமல் போன சம்பவத்தில் தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவர் சம்பந்தப்பட்டுள்ளார் என அவர்மீது செய்யப்பட்ட முறைப்பாடு ஒன்று சம்பந்தமாக சாட்சியமளிப்பதற்காக ஜனாதிபதி ஆணைக்குழு முன் ஆஜரான அவர், அந்த முறைப்பாடு அரசியல் நோக்கத்தின் அடிப்படையில் செய்யப்பட்டதாகக் கூறினார்.

# கேரள அரசுக்கு ஐ.நா.சபை விருது

**தொ**ற்று அல்லாத நோய்களை கட்டுப்படுத்தியதற்கும், தேவையான தடுப்பு நடவடிக்கைகளை எடுத்தமைக்கும் பல்வேறு பங்களிப்புகளைச் செய்தமைக்காக கேரள அரசுக்கு ஐ.நா. சபை விருது வழங்கி கவுரவித்துள்ளது.

ஐ.நா.வின் வரலாற்றிலேயே ஒரு நாட்டில் ஒரு மாநிலம் சுகாதாரத் துறைக்காகச் சிறப்பு விருதை வென்றுள்ளது இதுதான் முதல் முறையாகும்.

உலக சுகாதார அமைப்பின் இயக்குநர் டெட்ராஸ் அதானம் கெப்ரியாஸஸ் விடுத்த அறிவிப்பில், "ஐ.நா.வின் யுஎன்ஐஏடிஎப் (United Nations Interagency Task Force on the prevention and control of Non-communicable Diseases - UNIATF) விருது கேரள அரசுக்கு வழங்கப்படுகிறது. தொற்று அல்லாத நோய்களைக் கட்டுப்படுத்தியதற்காகவும், தடுப்பு நடவடிக்கைகளைச் சிறப்பாகச் செய்தமைக்காகவும் இந்த விருது வழங்கப்படுகிறது.

கடந்த 2019 ஆம் ஆண்டில் தொற்று நோய் அல்லாத நோய்களைக் கட்டுப்படுத்தவும், தடுக்கவும் கேரள அரசு செய்த தீவிர நடவடிக்கைகள், மனநல மேம்பாட்டுக்கான நடவடிக்கைகள் போன்வற்றை அங்கீகரித்து இந்த விருது அறிவிக்கப்படுகிறது" எனத் தெரிவித்துள்ளார்.

கேரள சுகாதாரத் துறை அமைச்சர் கே.கே.ஷைலஜா கூறுகையில், "சுகாதாரத் துறையில் ஓய்வின்றி கேரள

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# இந்து சமுத்திரத்தில் அமெரிக்கா இராணுவத்தளங்களை நிலை நிறுத்தியுள்ளது – சீனத் தூதர்

கொழும்பிலிருந்து வெளியாகும் டெய்லிமிரர் (Daily Mirror) என்ற ஆங்கிலப் பத்திரிகைக்கு இலங்கை - சீனா உறவுகளின் தற்போதைய நிலை குறித்து இலங்கைக்கான தற்காலிக சீன தூதர் ஹூ வெய் (Hu Wei) பேட்டியளித்துள்ளார். இந்தியா மற்றும் அமெரிக்காவுடன், சீனா சம்பந்தப்பட்ட சர்ச்சைக்குரிய பிரச்சினைகள் குறித்த எல்லாக் கேள்விகளுக்கும் அவர் பதிலளித்துள்ளார்.

***கேள்வி:*** *இருதரப்பு உறவுகளின் தற்போதைய நிலையை நீங்கள் எவ்வாறு பகுப்பாய்வு செய்வீர்கள்?*

**பதில்:** வரலாற்றில் நமது இருதரப்பு உறவின் மிகச்சிறந்த காலகட்டம் இதுவாக இருக்கலாம் என்று நான் நினைக்கிறேன். இந்த வருடத்தின் கடந்த பாதிக்காலம், இரண்டு நாடுகளும் கோவிட்-19 தொற்று நோயால் நிறைய பாதிக்கப்பட்டுள்ளன. எங்களது இருதரப்பு உறவுகள் மீண்டும் சிக்கல்களின் சோதனைக்கு உள்ளாகியதுடன், மேலும் வலுவடைந்தும் உள்ளன. எங்கள் நட்பைப் பற்றி நாங்கள் மென்மேலும் அதிகம் கற்றுக்கொண்டதே, இந்த தொற்று நோயைக் குறித்த ஒரு சிறந்த விஷயமாக இருக்கின்றது. கடந்த சில மாதங்களாக இரு நாட்டு மக்களும் ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருந்தனர். பரஸ்பர ஆதரவுடன், நாங்கள் ஏனைய நாடுகளைக் காட்டிலும் நிலைமையைச் சிறப்பாக சமாளித்தோம்.

***கேள்வி:*** *அண்மையில் வெளியுறவுச் செயலாளர் ஜெயநாத் கொழும்பகே (Jayanath Colombage) எனக்களித்த பேட்டியில், பொருளாதார ஒத்துழைப்புக்காக இலங்கை சீனாவுடன் உடன்பாட்டிற்கு வர வேண்டும் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். எனினும், இலங்கை ஒருபோதும் இந்தியாவின் மூலோபாய பாதுகாப்பு குறித்த அக்கறைகளை விட்டுக்கொடுக்காது என அவர் தெரிவித்தார். இதனை சீனா எப்படி நோக்குகின்றது?*

பதில்: முதலில், ஒவ்வொரு சுதந்திர நாடும் தனது தேசிய நலன்களை மற்றவர்களுக்காக சமரசம் செய்து கொள்ளக்கூடாது. இலங்கையைப் பொறுத்தவரை, அது இலங்கைக்குத்தான் முன்னுரிமை அளிக்க வேண்டும். இரண்டாவதாக, பொருளாதார ஒத்துழைப்பு பற்றி நாம் பேசும் போது, இலங்கையின் மிகச்சிறந்ததொரு நட்பு மற்றும் பங்காளி நாடாக சீனா உள்ளது. ஆனால் எமது நட்பு அதற்கு அப்பாற்பட்டது. எமது உறவு பொருளாதார அபிவிருத்தியை மட்டுமன்றி, மூலோபாய கூட்டு ஒத்துழைப்பையும் அடிப்படையாகக் கொண்டது, உங்களுக்கு தெரிந்த வகையில், தொற்றுக்கு எதிரான போராட்டத்தில் கடந்த சில மாதங்களில் கூட நாங்கள் ஒருவரையொருவர் ஆதரித்தோம். இலங்கையில் கொரோனா வைரஸ் பரவ ஆரம்பித்த பின்னர், 73,000 இற்கும் மேற்பட்ட பரிசோதனை உபகரணங்கள், 4.5 மில்லியன் முகக்கவசங்கள், 54,000 ஊழியர் பாதுகாப்பு உபகரணங்கள் உட்பட பல அவசர மருத்துவ பொருட்கள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன. இவைகள் சீன மத்திய அரசாங்கத்திடம் இருந்து மாத்திரமல்லாது, சீனாவின் உள்ளூராட்சி அரசாங்கங்கள், நிறுவனங்கள், அமைப்புகள் மற்றும் சாதாரண மக்களிடமிருந்தும் கூட கிடைக்கப்பெற்றன. கடந்த தசாப்தத்தில், சர்வதேச அரங்கில், சீனா எப்போதும் பல முக்கிய பிரச்சினைகளுக்காக இலங்கையை பாதுகாத்தது. பொருளாதார உறவுகளில் மாத்திரம் எங்களது ஒத்துழைப்பை நாம் மட்டுப்படுத்திக் கொள்ளக்கூடாது. இது அதைக்காட்டிலும் மிக அதிகமாக, வண்ணமயமாக பரந்து ஆழமானதாக உள்ளது.



*தற்காலிக சீன தூதர் ஹூ வெய்*

***கேள்வி:*** *மூலோபாய கூட்டு ஒத்துழைப்பு என நீங்கள் சொல்லும் போது, நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்?*

**பதில்:** மூலோபாய பங்காளிகளாக, நாம் ஒருவருக்கொருவர் நல்லதொரு புரிதலை கொண்டிருக்க வேண்டும். ஒருவரையொருவர் பாதுகாக்கும் மற்றும் எங்களது முக்கிய நலன்கள் சார்ந்த விஷயங்களில் நாங்கள் ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருக்க வேண்டும். இலங்கை அரசு இக்கட்டான நேரங்களில் சீனாவை அணுகும் போதெல்லாம், நாங்கள் உதவி செய்வோம். சீனாவிற்கு இருதரப்பு அல்லது பலதரப்பு பிரச்சினைகளில் ஆதரவு தேவைப்பட்டு இலங்கையிடம் வந்தால், நாம் அதேமாதிரியான ஒத்துழைப்பினை இந்தத் தீவில் இருந்து பெறுகின்றோம். இது ஒரு புரிந்து கொள்ளும் திறனுள்ள கூட்டு.

***கேள்வி:*** *இந்த விடயத்தில் பாதுகாப்பு அம்சத்தை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?*

பதில்: இந்தியா, சீனா அல்லது வேறு எந்த நாடுகளாக இருந்தாலும், இலங்கை ஒரு சுதந்திர நாடு என்ற வகையில், அனைத்து அண்டை நாடுகளுடனும் இயல்பான பாதுகாப்பு ஒத்துழைப்பைக் கொண்டுள்ளது. நாங்கள் அதனை மதிக்கின்றோம். நாங்களும் அதற்கு தயாராக இருக்கின்றோம்.

***கேள்வி:*** *இப்போது, சீனாவும் இலங்கையும் கோவிட்-19 ஆல் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. பொருளாதார ஒத்துழைப்பிற்கான சாத்தியத்தை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?*

**பதில்:** அது ஏற்கனவே அதன் பாதையில் போய்க் கொண்டிருக்கின்றது. நாங்கள் காத்திருக்க வேண்டியதில்லை. கடந்த சில மாதங்களாக, பொதுத் தேர்தலுக்கு முன்னர் கூட, இரு தரப்பினரும் பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துவதில், குறிப்பாக இலங்கையின் பொருளாதாரத்தை புத்துயிர் பெற உதவுவதில் கவனம் செலுத்தியிருந்தனர்.
தூதரகம் நிதி மற்றும் முதலீடு ஆகிய இரண்டிலும் ஒத்துழைப்பை வழங்க முயன்றது. நாங்கள் ஏற்கனவே சில

சாதகமான முன்னேற்றங்களை அடைந்துள்ளோம். மார்ச் மாதத்தில், வெளிநாட்டுக் கடன்களைத் தீர்க்கவும், கொள்ளை நோயை எதிர்த்துப் போராடவும் இலங்கைக்கு சில அவசரக் கடன்கள் தேவைப்பட்டது. 10 நாட்களுக்குள் சீன அபிவிருத்தி வங்கி 500 மில்லியன் அமெரிக்க டொலரை சலுகைக் கடனாக வழங்கியது. அம்பாந்தோட்டையில் 300 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியுள்ள இன்னுமொரு பெரிய முதலீடு அடுத்ததாக உள்ளது. அதாவது மிகவும் சாதகமான பேச்சுவார்த்தையின் கீழ், ஒரு பெரிய ரயர் உற்பத்தி மையம். ரயர் உற்பத்திக்கு நிறைய இரப்பர் தேவை. இலங்கைக்கு 2,000 இற்கும் மேற்பட்ட நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

***கேள்வி:*** *இலங்கையின் இரப்பர் சீனாவில் எவ்வளவு பெரியளவில் தேவையாக உள்ளது?*

**பதில்:** சீனாவில் ஏற்கனவே சில ரயர் உற்பத்தி நிலையங்கள் உள்ளன. ஆனால் உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் இன்னும் பாரியளவிலான தேவை உள்ளது. தேவையை பூர்த்தி செய்ய போதுமான அளவு இரப்பர் சப்ளைகளை இலங்கையால் வழங்க முடியுமா என்பது தான் கவலை கொள்ள வேண்டிய ஒரே விஷயம்.

***கேள்வி:*** *கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?*

**பதில்:** இது ஒரு 1.4 பில்லியன் அமெரிக்க டொலர் திட்டமாகும். நீங்கள் காணும் பல வேலை வாய்ப்புகளை இது உருவாக்கியுள்ளது. அவர்கள் ஏற்கனவே கடலில் இருந்து நிலத்தை மீட்டுள்ளனர். கடந்த சில மாதங்களாக, கோவிட்-19 தொற்று இருந்த போதிலும், நிறைய உள்கட்டமைப்பு வேலைகள் செய்யப்பட்டுள்ளன. முதன்மைத் திட்டத்தின் பிரகாரம், ஒரு சர்வதேச நிதி மையம் ஒரு முன்னோடியாக வரும். அடுத்த கட்ட அபிவிருத்திக்கு இலங்கை பாராளுமன்றத்தினுடைய சட்டமியற்றலுக்காக நாங்கள் காத்திருக்கிறோம்.

***கேள்வி:*** *சமீபத்தில், சீனத் தகவல் தொடர்பு கட்டுமான நிறுவனத்தின் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. இது துறைமுக நகரத்தை கட்டிய சீனத் துறைமுகப் பொறியியல் நிறுவனத்தின் தாய் நிறுவனம் ஆகும். இந்தத்தடை இங்கேயுள்ள வேலைகளைக் பாதிக்குமா?*

**பதில்:** இலங்கையின் மிகப்பெரிய வெளிநாட்டு நேரடி முதலீடு கொழும்பு துறைமுக நகரம் ஆகும். கட்டம் 1 இற்கு மாத்திரமே 1.4 பில்லியன் அமெரிக்க டொலர் செலவாகின்றது. அடுத்த இரண்டு தசாப்தங்களில் இரண்டாவது கட்டமாக, மற்றொரு 13 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீடும் 83,000 இற்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புகளை உருவாக்குவதாகவும் இருக்கும். இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சிக்கான புதிய இயந்திரமாக இது இருக்கும்.
சி.சி.சி.சி (China Communications Construction Company Limited - CCCC) இன் சில துணை நிறுவனங்கள் கறுப்புப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன, ஆனால் நாங்கள் அறிந்த வரையில் சீனத் துறைமுகப் பொறியியல் கூட்டுத்தாபனம் அந்தப் பட்டியலில் இல்லை. மிகவும் முக்கியமானது என்னவென்றால், நாங்கள் இதைப் பற்றி மிக அதிகளவில் கவலைப்பட வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. கொழும்புத் துறைமுக நகரம் என்பது இலங்கையின் நிலப்பரப்பில் அமைந்துள்ள ஒரு கூட்டுத்திட்டம், அமெரிக்காவின் நிலப்பரப்பில் அல்ல. இறையாண்மை கொண்ட ஏனைய நாடுகளின் உள்விவகாரங்களில் கடுமையாக தலையிடும் அமெரிக்காவிடமிருந்தான இத்தகைய ஒருதலைப்பட்சமான பொருளாதாரத் தடைகள் எந்தவொரு சர்வதேச சட்டரீதியான விளைவையும் கொண்டிருக்கவில்லை அத்தோடு அது ஏற்கப்படவும் மாட்டாது.
1950 களில், அமெரிக்காவின் முற்றுகையை முறியடிக்க குறிப்பிடத்தக்க "இரப்பர்-அரிசி உடன்படிக்கை" என்ற ஒப்பந்தத்தில் சீனாவும் இலங்கையும் கையெழுத்திட்டன. அதன் மரபு எம்மை இன்னமும் வழிகாட்டும். தற்போதைய இலங்கை அரசாங்கத்தின் மீது எனக்கு நம்பிக்கை உள்ளது. ஜனாதிபதியும் பாராளுமன்றமும் மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மக்களுக்கு என்ன தேவை என்பதை அவர்கள் புரிந்து கொள்வார்கள் என்றும், தேசிய இறையாண்மையையும் நலன்களையும் உறுதியாகப் பாதுகாப்பார்கள் என்றும் நான் நம்புகிறேன். நாட்டிற்கும் மக்களுக்கும் பெரும் நன்மை தரும் மிகப்பெரிய அந்நிய முதலீட்டை ஓர் அரசாங்கத்தால் பாதுகாக்க முடியாவிட்டால், எதிர்கால முதலீடுகளுக்கு யார் வருவார்கள்? நாங்கள் அதனைப் பற்றி சந்தேகங் கொள்வதற்கு எந்த காரணமும் இல்லை. மேற்கத்தைய முற்றுகையை முறியடிக்க கொழும்பு துறைமுக நகரத் திட்டம் "இரப்பர்-அரிசி உடன்படிக்கை" என்பதின் புதிய வடிவமாக இருக்கும். நாங்கள் மீண்டும் வெற்றி கொள்வோம்.

***கேள்வி*** *இந்திய ஊடகங்களில் சீனா சம்பந்தப்பட்ட திட்டங்கள் குறித்து நிறைய விமர்சனங்கள் உள்ளன. முன்னதாக, அக்கறைப்படவேண்டிய விஷயங்கள் குறித்து இலங்கை, சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் உள்ளிட்ட பேச்சுவார்த்தைகளுக்கான ஒரு யோசனை இருந்தது. அந்த யோசனை உங்களுக்கு எவ்வளவு தூரம் ஏற்புடையதாகவுள்ளது?*

**பதில்:** சில பக்கச்சார்பான ஊடகங்களால் நாங்கள் உந்தப்படக் கூடாது. இலங்கையிலும் பிராந்தியத்திலும் பிராந்திய ஒத்துழைப்பு என்ற கருத்துக்காக நாம் வெளிப்படையாக இருக்கிறோம். உண்மையான நண்பன் என்ற முறையில், சீனாவே முதன்மையானதென சீனா ஒருபோதும் கூறுவதில்லை என்பதோடு பக்கசார்பினைத் தெரிவு செய்வதற்கு இலங்கையை ஒருபோதும் நிர்ப்பந்திக்கவுமில்லை. நாங்கள் அவ்வாறு செய்ய விரும்பவில்லை. நமது நண்பர் மற்றவர்களுடன், குறிப்பாக அவர்களது அயலவர்களுடன் நட்புக் கொள்ளுவது குறித்து நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இதுவே இயல்பான மற்றும் ஆரோக்கியமான சர்வதேச உறவுகள் ஆகும்.

***கேள்வி:*** *இந்தியாவிற்கும் சீனாவிற்குமான இடையேயான எல்லைப் பதற்றம் அதிகமாக உள்ளது. இது பிராந்தியத்தில் அலை அலையான விளைவுகளை ஏற்படுத்துமா?*

**பதில்:** எல்லைப் பகுதிகளில் சமீபத்தில் நடந்த சம்பவங்கள் தொடர்பாக சீனாவும் இந்தியாவும் இராஜதந்திர மற்றும் இராணுவ வழிகளின் மூலம் நெருங்கிய தொடர்புகளை செய்து வருகின்றன. மேலதிக விபரங்களுக்குள் நான் செல்ல விரும்பவில்லை. மறுபக்கத்தில் இருந்து பல கதைகளை

நீங்கள் கேட்கும் போது, நான் ஒரு உண்மையை வலியுறுத்த விரும்புகிறேன்: கடந்த தசாப்தங்களில், சீனா ஏற்கனவே தனது 14 அண்டை நாடுகளில் 12 அண்டை நாடுகளுடனான எல்லைப் பிரச்சினைகளை நட்பு மற்றும் அமைதியான பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்து வைத்துள்ளது, மோதல்கள் மற்றும் போர்கள் மூலம் அல்ல. எல்லை வரையறைகளுக்குப் பிறகு, எல்லைகள் இனி ஒருபோதும் பதற்றத்தின் கோடுகளாக இருக்காது.
இரு நாடுகளையும் இரண்டு மக்களையும் இணைக்கும் பாலமாக இவை மாறிவிடுகின்றன. பெரும்பாலான எங்களது அண்டை நாடுகளுடனான எல்லைப் பகுதிகளை நாங்கள் வெற்றிகரமாக உருவாக்கியுள்ளோம். சீனா ஒருபோதும் தனது அண்டை நாடுகள் மீது மேலாதிக்கத்தை நாடுவதில்லை.

***கேள்வி:*** *இலங்கை மீதான அமெரிக்க- சீனா வர்த்தக யுத்தத்தின் தாக்கம் பற்றி உங்கள் கருத்து?*

**பதில்:** ஏதாவது பெரிய பாதிப்பு இருக்கிறதென நான் நினைக்கவில்லை. பல வெளிநாட்டு நிறுவனங்கள் சீனாவில் இருந்து வேறு நாடுகளுக்கு இடம் மாற்றின என்ற மேற்கத்திய செய்தி ஊடகத்தில் இருந்து சில கதைகளை நீங்கள் கேட்டிருக்கலாம். இதில் உண்மை இல்லை. உண்மையில் சில நிறுவனங்கள் சீனாவில் இருந்து வெளியேறின. வர்த்தகப் போர் என்று அழைக்கப்படுவதன் காரணமாக இது நிகழவில்லை, மாறாக சீனாவின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் தொழிலாளர் பாதுகாப்புக்கான கடுமையான கட்டுப்பாடுகள் காரணமாகவே இது நிகழ்ந்தது.
பெரும்பாலான சர்வதேச நிறுவனங்கள் சீனாவில் நிலை கொள்வதையே தேர்ந்தெடுத்தன. ஏனெனில், குறிப்பாக கோவிட்-19 பரவலுக்குப் பிறகு, அவர்களால் சீனாவை விட சிறந்த அல்லது பாதுகாப்பான இடத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை.
சீனாவில் பல தசாப்தகால அனுபவம் கொண்ட 200 இற்கும் மேற்பட்ட அமெரிக்க நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமெரிக்க~சீனா வணிக கவுன்சிலின் (US-China Business Council) அமெரிக்க உறுப்பு நிறுவனங்கள், சீனாவிற்கான ஒரு நீண்ட



கால உறுதிப்பாட்டில் கவனம் செலுத்துகின்றன என்று அதன் சமீபத்திய ஆய்வில் கண்டு பிடித்துள்ளது. சீனா முதல் இடத்தில் உள்ளது, அல்லது உலகளாவிய மூலோபாயத்திற்கு முன்னுரிமைகளைக் கொண்டிருப்பதில் முதல் ஐந்து நாடுகளில் சீனா இருக்கின்றதென 83% ஆன நிறுவனங்கள் கருதுகின்றன. அத்துடன் அடுத்த ஐந்து ஆண்டுகளில் சந்தை வர்த்தக வாய்ப்புகள் பற்றி நம்பிக்கை இருப்பதாக கிட்டத்தட்ட 70% ஆன நிறுவனங்கள் கூறுகின்றன. சீனாவிற்கு வெளியே உற்பத்தி நடவடிக்கைகளை நகர்த்தும் திட்டம் இல்லை என்று 87% ஆன நிறுவனங்கள் சுட்டிக் காட்டுகின்றன.
உண்மையில், இந்த ஆண்டின் இரண்டாவது காலாண்டில், சீனாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 3.2 சதவீதமாக உள்ளது. இது மற்ற முக்கிய பொருளாதாரங்களுடன் ஒப்பிடுகையில் சிறந்த செயல்திறனைக் குறிக்கின்றதோடு சீனாவில் உள்ள அனைத்து சர்வதேச நிறுவனங்களுக்கும் அதிக நம்பிக்கையை அளிக்கின்றது.

***கேள்வி:*** *மண்டலம் மற்றும் பாதை முன்னெடுப்பு* (Belt and Road Initiative - BRI) *தொடர்பான இலங்கை - சீன ஒத்துழைப்பின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?*

**பதில்:** பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர், இலங்கை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஒரு வலுவான அரசாங்கத்தை அமைத்துள்ளது. இது எங்களது ஒத்துழைப்புக்கு சிறந்த காலகட்டமாக அமையலாம்.
விரைவாகவும் பரந்த அளவிலும் ஒத்துழைப்பை நாங்கள் தொடர முடியும். இலங்கை தனது பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திகளை மேம்படுத்த உதவுவதற்கு சீனாவிடமிருந்து அதிக முதலீடுகளை நாங்கள் ஈர்க்க முடியும்.

***கேள்வி:*** *உள்கட்டமைப்பினை மேம்படுத்துவதையா அல்லது தொழில்துறை மண்டலங்களையா நீங்கள் அதிகம் உந்துகிறீர்கள்?*

**பதில்:** வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமானால், இலங்கைக்கு இரண்டுமே தேவை. சீனாவில், நீங்கள் பணக்காரராக விரும்பினால், முதலில் பாதையை உருவாக்குங்கள் என்று நாங்கள் சொல்கின்றோம். போக்குவரத்து மிக முக்கியமானது. தெற்கு அதிவேகப்பாதையின் காரணமாக தற்போது கொழும்பிலிருந்து அம்பாந்தோட்டையை அடைவதற்கு இரண்டரை மணி நேரம் மாத்திரமே எடுக்கின்றது.
கடந்த காலத்தில், இது ஏழு மணி நேரத்திற்கும் அதிகமாக இருந்திருக்கலாம். தொழில்துறை வளர்ச்சி முழு நாட்டிற்கும் மிகவும் முக்கியமானது, இது சீனா அதன் 40 ஆண்டு கால சீர்திருத்தம் மற்றும் திறந்து விடுதல் என்பதிலிருந்து கற்றுக்கொண்ட மிகப்பெரிய அனுபவத்தில் ஒன்றாகும். இலங்கையின் தொழில்மயமாக்கலிற்கான சாத்தியப்பாடுகள் பாரியதாக உள்ளது.

***கேள்வி:*** *மத்திய அதிவேகப்பாதை மற்றும் கொழும்பு - இரத்தினபுரி அதிவேகப்பாதையை நிர்மாணிப்பதில் சீன முதலீடு ஏதேனும் உள்ளதா?*

பதில்: எனக்குத் தெரிந்தவரையில், சீன நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்கள் மத்திய அதிவேகப்பதையில் ஈடுபட்டுள்ளன. அவர்களில் சிலர் இரத்தினபுரி பகுதியிலும் ஆர்வம் காட்டுகின்றனர்.

***கேள்வி:*** *முன்னதாக, பீஜிங்கிற்கு*

*வருகை தருமாறு அதிபர் ஜி ஜின்பிங் (Xi Jinping) ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவுக்கு அழைப்பு விடுத்திருந்தார். இப்போது, இரு நாடுகளும் கோவிட்-19 பரவலைக் கொண்டிருக்கின்றன. அப்படி ஒரு பயணம் நடைபெறுவதற்கான வாய்ப்பு ஏதாவது இருக்கிறதா?*

**பதில்:** நிட்சயமாக ஒரு வாய்ப்பு உள்ளது. இரு தரப்புக்குமான முன்னுரிமைப் பட்டியலில் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவின் சீனா விஜயம் எப்போதும் முதலிடத்தில் உள்ளது. தற்போதைய சூழ்நிலையில், இரு தரப்பினருக்கும் வசதியான நேரத்தை நாங்கள் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது. அதற்கு முன்னர், தயார்ப்படுத்துவதற்காக முதலில் சில அமைச்சர்கள் அளவிலான விஜயங்கள் இடம்பெறலாம், இது ஒரு அரசு விஜயத்திற்கான வழக்கமானதொரு நடைமுறையாகும். தற்போது, இலங்கையின் எல்லை பயணிகளுக்கு மூடப்பட்டுள்ளது. அரச விஜயத்திற்கு முன்னர், தயார்ப்படுத்தும் முன்னேற்பாட்டுப் பயணங்களுக்கான சில நெகிழ்வான ஏற்பாடு இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

***கேள்வி:*** *மேற்கு நாடுகளால் பரிந்துரைக்கப்படுகின்ற சுதந்திர மற்றும் திறந்த இந்தோ-பசிபிக் கொள்கை என்ற கருத்தாக்கத்திற்கு வரும்போது, சீனா என்ன எதிர்பார்க்கின்றது?*

**பதில்:** சுதந்திர மற்றும் திறந்த கடற்பயணத்தில் எங்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லை. நாங்கள் எப்போதும் அதனை ஆதரிக்கிறோம், ஆனால் அது ஏனைய நாடுகளை குறிப்பாக சீனாவைத் தாக்குவதற்கு ஒரு சாக்குப்போக்காக பயன்படுத்தப் படுவதாகத் தெரிவது வருத்தத்திற்குரியது. அமெரிக்கா தனது இந்தோ-பசிபிக் இராணுவக் கட்டளையை 300,000 இற்கும் மேற்பட்ட படைவீரர்களைக் கொண்டு அமைத்தது மட்டுமல்லாமல், இந்தியப் பெருங்கடலில் தனது இராணுவ தளங்களையும் நிலை நிறுத்தியுள்ளது. சீனா இந்த பிராந்தியத்தில் எந்த ஒரு இராணுவக் கட்டளையோ அல்லது இராணுவ தளத்தையோ கொண்டிருக்கவில்லை. சுதந்திரமான மற்றும் திறந்த பிராந்தியத்தை யார் அச்சுறுத்துகின்றனர், மேலும் அதனைப் பற்றிக் கவலை கொள்வதற்கு எவர் அதிக காரணத்தைக் கொண்டுள்ளனர்?

***கேள்வி:*** *இது தொடர்பாக இலங்கை என்ன செய்ய வேண்டும் என நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள்?*

பதில்: தனித்துவமான மூலோபாய - பூகோள அரசியல் அமைவிடம் கொண்ட இலங்கை, சுதந்திரமான மற்றும் திறந்த கடற்பயணத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். அந்தத் தீவு தனது இறையாண்மை, சுதந்திரம் ஆகியவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும், எந்த வெளிநாட்டுத் தலையீட்டையும் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று நான் நினைக்கிறேன். இது தான் அதனது தேசிய நலன்களுக்கான திறவுகோல்.

***கேள்வி:*** *மக்கள் - மக்கள் பரிமாற்றங்களுக்கான திட்டங்கள் எவை?*

**பதில்:** நாங்கள் செய்யவதற்கு எதிர்பார்க்கும் மிக முக்கியமான விஷயங்களில் இதுவும் ஒன்றாகும். தொற்று நோயின் பின்னர், மக்கள் - மக்கள் பரிமாற்றங்கள் மேலும் மேலும் நிகழும். அதிக சீன சுற்றுலாப் பயணிகளை இலங்கை எதிர்பார்க்கிறதென ஜனாதிபதியும் பிரதமரும் என்னிடம் கூறினார்கள். சீன மக்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல விரும்பினால், முதலில் இலங்கையைத் தெரிவு செய்ய வேண்டுமென நாங்களும் எதிர்பார்க்கின்றோம்.

***கேள்வி:*** *உங்கள் பார்வையில், இலங்கை தொடர்பான தனித்துவம் என்ன?*

**பதில்:** முதலாவதாக, இலங்கை ஒரு நட்பு நிறைந்த நாடு என்பது சீன மக்கள் மத்தியிலுள்ள பொதுவான கருத்து. இது மிக முக்கியமான பகுதி. சீன மக்கள் சில நேரங்களில் மிகவும் எச்சரிக்கையாக இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் இலக்கைத் தேர்வு செய்யும் போது, முதலில் அவர்கள் தீங்கின்மை மற்றும் பாதுகாப்பு பற்றி சிந்திக்கிறார்கள். இலங்கையில், நிட்சயமாக, எங்களுக்கு அழகான காட்சிகள் நிறையவே உள்ளன.

***கேள்வி:*** *இறுதியாக, கடனைத் திருப்பிச் செலுத்துவதை தாமதிக்குமாறு சீனாவிடமிருந்து இலங்கை அரசாங்கம் கேட்கின்றது. நீங்கள் சாதகமாக பதிலளிப்பீர்களா?*

பதில்: வெளிப்படையாகச் சொன்னால், இலங்கைக்கு கடனைத் திருப்பிச் செலுத்துவதை தாமதிப்பதென்பது ஒரு நல்ல தேர்வாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. இது இருக்கும் பிரச்சினைகளில் ஒரு சிறிய சதவீதத்தை மட்டுமே தீர்க்க முடியும், ஆனால் பெரிய விலைகளுடன்.
பெருந்தொகையான வெளிநாட்டுக் கடன் இருக்கின்ற போதிலும் தனது கடன்களைத் தீர்ப்பதில் இலங்கை மிகவும் நல்ல பெயரைக் கொண்டுள்ளது. இலங்கைத்தீவு எப்போதும் அதன் கடன் கடப்பாடுகளை மதித்து நடப்பது, மிகவும் பாராட்டப்பட்டதுடன் போற்றப்படவும் வேண்டும். சர்வதேச நிதிச் சந்தைகளில் இலங்கைக்கு அதிக உதவியும் நம்பிக்கையும் கிடைக்க இந்த நற்பெயர் உதவுகிறது. மேலும், முதலீடு என்பது இலங்கை அரசாங்கத்திற்கு நேரடி வருமானம், இலங்கை மக்களுக்கு வேலைவாய்ப்பு என்பனவற்றைக் கொண்டு வரமுடியும் என்பது மாத்திரமல்லாமல், இலங்கையில் சர்வதேச நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்பவும் முடியும். ஓர் உண்மையான நண்பர் என்ற முறையில், சீனா எப்போதும் சாத்தியமான அனைத்து விதத்திலும் உதவ முயற்சிக்கும்.

**பேட்டி கண்டவர்: கெலும் பண்டார (Kelum Bandara)**

*தமிழில்: வானவில்*

# விளைவுகள் மோசமாகும்

**கொ**ரோனாவை எதிர்கொண்டது போன்று உலக நாடுகள் ஒற்றுமையில்லாமல் பருவநிலை மாற்றத்தையும் எதிர்கொண்டால் விளைவுகள் மிகவும் மோசமாக இருக்கும் என ஐ.நா., பொதுச்செயலர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் நியூயார்க் நகரில், ஐ.நா., சபையின், 75வது ஆண்டு பொதுக்கூட்டம் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்று வருகிறது. கொரோனா பரவல் காரணமாக, உறுப்பு நாடுகளின் தலைவர்கள் ஐ.நா., பொதுக்கூட்டத்தில் நேரடியாக பங்கேற்று உரையாற்ற முடியாததால் அவர்களின் பதிவு செய்யப்பட்ட உரை ஒளிபரப்பப்பட்டு வருகிறது. இதில் உரையாடிய ட்ரம்ப், கொரோனா வைரஸ் பரவலுக்கு சீனா தான் காரணம் என்றும், இந்த பேரழிவுக்கு சீனா பொறுப்பேற்க வேண்டும் எனவும் கூறினார்.

ட்ரம்பின் இந்த உரைக்கு கண்டனம் தெரிவித்த சீனா, ட்ரம்ப் அரசியல் வைரஸ் பரப்புவதாக விமர்சனம் செய்தது. ரஷ்யாவும் அமெரிக்காவுக்கு எதிராக கருத்து

**தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க...**

# சுவாமி அக்னிவேஷ் உரிமைகளைத் துறக்காத உண்மைத் துறவி!



இந்தியாவின் தலைசிறந்த மனித உரிமை, குடிமை உரிமைப் போராளிகளிலொருவரான சுவாமி அக்னிவேஷ் 11.9.2020 அன்று மாலை 6.30க்கு டெல்லியிலுள்ள தனியார் மருத்துவமனையில் உயிர் நீத்தார் என்ற செய்தி இந்தியாவிலும் வெளிநாடுகளிலுமுள்ள மனித உரிமைக் களப்போராளிகள், மதசார்பற்ற, ஜனநாயக, சோசலிச சக்திகளுக்கும் மத, இன, சாதி அடிப்படையில் ஒடுக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டுள்ள இந்திய மக்களுக்கும் பேரிடியாய் வந்து சேர்ந்துள்ளது.

1939 செப்டம்பர் 21இல் ஆந்திராவைச் சேர்ந்த சனாதன பார்ப்பனக் குடும்பத்தில் பிறந்த அவருக்குப் பெற்றோர்கள் இட்ட பெயர் வேப்பா ஷியாம் ராவ். நான்காம் வயதிலேயே அவரது தந்தை இறந்துவிட்டதால், இன்றைய ஹரியானா மாநிலத்தில் அப்போதிருந்த சமஸ்தானமொன்றில் உயர் அதிகாரியாகப் பணிபுரிந்து வந்த அவரது தாய்வழிப் பாட்டனாரால் வளர்க்கப்பட்ட அவர் சட்ட, வணிகப் படிப்புகளில் கல்லூரிப் பட்டதாரியாகி கொல்கத்தாவிலுள்ள புகழ்பெற்ற தனியார் கல்லூரியொன்றில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். பின்னர் சட்டப்படிப்பையும் முடித்துவிட்டு வழக்குரைஞராகவும் செயல்பட்டார்.

### காவி யாருடையது?

1968இல் ஹரியானாவுக்கு சென்று ஆரிய சமாஜத்தில் சேர்ந்து சந்நியாசிகளுக்கான உறுதி மொழிகளை எடுத்துக் கொண்டார். ஆனால் அவரது முற்போக்குக் கருத்துகளை ஏற்றுக் கொள்ளாத பிற்போக்குவாதிகளே அந்த அமைப்பின் தலைமைப் பொறுப்பில் இருந்ததால், அதிலிருந்து வெளியேற்றப்பட்டார் என்றாலும் கடைசி வரை உண்மைத் துறவியாக காவி உடையையே தரித்து வந்தார். 'காவி' என்பது புனிதமானது என்றும் அதற்கும் இந்துத்துவாதிகளுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என்றும் தொடர்ந்து கருத்துப் பரப்புரை செய்துவந்தார்.

**எஸ்.வி.ராஜதுரை**

ஆரிய சமாஜத்தின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட ஆரிய சபா என்ற அரசியல் கட்சியை 1970இல் தொடங்கிய அவர், 1977இல் நடந்த சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று, ஹரியானா மாநிலத்தில் அமைந்த ஜனதா கட்சி அரசாங்கத்தில் கேபினெட் தகுதி பெற்ற கல்வி அமைச்சராகச் சேர்க்கப்பட்டார். அமைச்சராக இருக்கும்போதே ஹரியானா அரசாங்கத்தின் பிற்போக்குக் கொள்கைகளின் காரணமாக அமைச்சர் பதவியிலிருந்து விலகிய அவரை சதி, கொலைக் குற்றங்களில் சம்பந்தப்படுத்தி 14 மாதங்கள் சிறையில் தள்ளியது அந்த அரசாங்கம். ஆனால் குற்றமற்றவர் என்று நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டு விடுதலையானார்.

### கொத்தடிமை மீட்பு

1982இல் டெல்லியின் சுற்றுப் பகுதிகளில் கல் குவாரிகளில் இருந்த கொத்தடிமைத் தொழிலாளர்களை மீட்பதற்காக 'பந்துவா முக்தி மொர்ச்சா' என்னும் அமைப்பை நிறுவினார். அதன் செயல்பாடுகள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் விரிவடைந்தன. இந்தியா முழுவதிலுமிருந்த பல்வேறு மனித உரிமை இயக்கங்களுடனும் போராளிகளுடனும் தன்னை இணைத்துக் கொண்ட அவர். கொத்தடிமைகளின் நிலையைப் பற்றி ஜெனீவாவிலுள்ள ஐ.நா.மனித உரிமை ஆணையத்தின் முன் நவீன அடிமை முறைகளைப் பற்றிய விவரங்களை எடுத்துரைத்தார். கணவரை இழந்த பெண்கள் 'உடன்கட்டை' ஏற்றும் வழக்கத்தைப் புதுப்பிக்க முயன்ற இந்துத்துவ சக்திகளுக்கு எதிராகப் போராடிய அவர், இந்திய ஒன்றிய அரசாங்கம், 'உடன்கட்டை ஏறுவதைத் தடுக்கும் சட்டம் 1987' என்பதை இயற்றச் செய்வதில் முக்கியப் பங்காற்றியதுடன் பெண் சிசுக் கொலைகளைத் தடுத்து நிறுத்தும் இயக்கத்திலும் ஈடுபட்டார். சர்வதேசக் கண்ணோட்டம் கொண்டிருந்த அவர், கடவுச் சீட்டுகளும் புலம்பெயர்வோருக்கான சட்டங்களும் எல்லா நாடுகளிலும் அகற்றப்பட வேண்டும் என்று பேசி வந்தார்.

### தமிழகமும் அக்னிவேஷும்

கொத்தடிமைகளை மீட்கும் இயக்கத்தின் சார்பாகவும், பல்வேறு மதப் பிரிவினரிடையே நல்லிணக்கத்தை உருவாக்குவதற்காகவும் நடந்த முயற்சிகள் சார்பாகவும் அவர் தமிழ்நாட்டிற்குப் பலமுறை வருகை தந்திருக்கிறார். 1981–82ஆம் ஆண்டுகளில் எம்.ஜி.ஆர்.ஆட்சிக் காலத்தில் நக்ஸலைட்டுகளை ஒடுக்குதல் என்ற பெயரால் நூற்றுக் கணக்கானோர் கைது செய்யப்பட்டனர்.

தர்மபுரி, திருப்பத்தூர் பகுதிகளில் முப்பதுக்கும் மேற்பட்ட நக்ஸலைட் புரட்சியாளர்கள் 'என்கவுன்ட்டர்' மூலம் கொல்லப்பட்டு, அந்தப் பகுதிகளுக்குள் மனித உரிமை ஆர்வலர்கள் நுழைய முடியாதிருந்த காலத்தில் எனது அழைப்பை ஏற்று தமிழகம் வந்த அவர் 1982இல், காலஞ்சென்ற சோசலிஸ்ட் நாடாளுமன்ற உறுப்பினர் மிருணாள் கோரெ, கே.ஜி.கண்ணபிரான், பாரிஸ்டர் ராமச்சந்திரன். பி.வி.பக்தவத்சலம் ஆகியோருடன் இணைந்து அந்தப் பகுதிகளுக்குள் சென்று போலீஸ் தடையையும் மீறி பல்வேறு இடங்களில் சொற்பொழிவாற்றினார். போலீசாரால் அடித்துக் கொல்லப்பட்ட புரட்சியாளர் தர்மபுரி பாலனை பகத் சிங்குடன் ஒப்பிட்டுப் பேசினார். ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும் கவிதை நடையில் பேசும் ஆற்றல் கொண்டிருந்த அவர், ஆங்கிலத்தைத் தவிர்க்குமாறும் தாய்மொழியிலே பேசுமாறும் என்னைப் போன்றவர்களிடம் கூறுவார்.

**உச்சநீதிமன்றத்தின் கண்டனம்**

இந்துத்துவத்தையும் சங்கிகளையும் உறுதியாக எதிர்த்து வந்த அவர், முஸ்லிம்களைப் புண்படுத்தும் 'வந்தேமாதரம்' பாடலை அரசாங்கம் பயன்படுத்தக் கூடாது என்று வலியுறுத்தி வந்தார். காஷ்மீர் பள்ளத்தாக்கு மக்கள் மீது ஏவப்பட்டு வரும் ஒடுக்குமுறைகளை எதிர்த்து வந்த அவர், அங்கு முஸ்லிம்களிடமிருந்து காஷ்மீர் பண்டிட்டுகளைப் பிரித்தெடுக்க ஒன்றிய அரசாங்கம் செய்து வந்த முயற்சிகளைக் கண்டனம் செய்தார்.

பூரி ஜகந்நாதர் ஆலயத்திற்குள் இறை நம்பிக்கையுள்ள பிற மதத்தினரையும் அனுமதிக்க வேண்டும், காஷ்மீர் அமர்நாத் குகையில் உள்ள சிவலிங்கம் என்று சொல்லப்படுவது ஒரு பனிக்கட்டிதானே தவிர வேறல்ல என்ற அவரது கருத்துகள் இந்துத்துவவாதிகளால் சர்ச்சைக்குள்ளாக்கப்பட்டன. இரண்டாவதாகச் சொல்லப்பட்ட கருத்து, இந்துக்களின் மத உணர்வைப் புண்படுத்தும் என்று கூறி உச்சநீதிமன்றம் அவரைக் கண்டனம் செய்தது.

2018இல் கர்நாடகாவில் கவுரி லங்கேஷ் கொல்லப்பட்டதைக் கண்டனம் செய்ய ஆளுநர் மாளிகையை நோக்கிய பேரணியில் கலந்து கொண்டார். மாட்டிறைச்சி உண்பது மனித உரிமைகளிலொன்றாகக் கருதிய அவர், பசுப் பாதுகாப்பு என்ற பெயராலும், மாட்டிறைச்சி உண்பதைத் தடைசெய்ய வேண்டும் என்ற பெயராலும் இந்துத்துவ குண்டர்கள் நடத்திவந்த கொலை வெறித் தாக்குதல்களை முழுமூச்சோடு எதிர்த்து வந்தார். இதன் காரணமாக சங்கிகள், அவர் 'கிறிஸ்தவ மிஷனரிகளின் ஏஜென்ட்' என்ற பரப்புரையை முடுக்கிவிட்டனர்.

**ஜார்க்கண்ட் தாக்குதல்**

சட்டவிரோத சடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு மகாராஷ்டிர சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள கவுதம் நவ்லாகா, ஆனந்த் தெல்தும்ப்டெ, சுதா பரத்வாஜ் ஆகியோருடன் நட்பு கொண்டிருந்த அவர், ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ள பழங்குடி மக்கள், உழவர்கள் ஆகியோரின் உரிமைகளைப் பாதுகாக்கும் செயல்பாடுகளில் ஈடுபட்டார். அதன் பொருட்டு இரு ஆண்டுகளுக்கு முன் ஜார்கண்ட் மாநிலத்துக்குச் சென்ற அவரை இந்துத்துவக் குண்டர்கள் அடித்துத் துவைத்தனர். அங்குள்ள உழவர்களால் அவர் காப்பாற்றப்பட்டாலும், உடல் முழுவதிலும், குறிப்பாக ஈரல் பகுதியில் விழுந்த கனத்த அடிகள் காரணமாக ஓராண்டுக்காலம் செயலற்றவராக்கப்பட்டு, நீண்டகால மருத்துவ சிகிச்சை பெற்று வந்த அவருக்கு அந்த சிகிச்சை பலனின்றிப் போனதால் மரணமடைந்தார்.

என்னைவிட அவர் எட்டு மாதங்களே மூத்தவர். டெல்லியில் அவரது வீட்டில் எனக்குக் கிடைத்த விருந்தோம்பலை மறக்கவே முடியாது. நல்ல நகைச்சுவை உணர்வு கொண்டிருந்த அவர், "என் வீட்டில் அசைவ உணவு கிடைக்காது என்பதற்காக கோபித்துக் கொள்ளாதீர்கள்" என்று கூறுவார். இந்தியாவிலுள்ள உண்மையான ஆன்மிக மரபு, மதச்சார்பின்மை, ஜனநாயகம், சோசலிசம், காந்தியம் ஆகியவற்றின் கலவையாக விளங்கிய அந்த அற்புதமான மனிதரின் இறப்பு மேற்சொன்ன விழுமியங்களைப் பாதுகாக்க விரும்பும் இந்தியர்கள் எல்லோருக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பு.

# ராஜீவ் காந்தியைக் கொல்வதற்கு பிரபாகரனே உத்தரவிட்டார்!

*-எரிக் சோல்கெய்ம்*

புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கொடுத்த உத்தரவின் பேரிலேயே மே மாதம் 1991இல் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி புலிகளின் பெண் தற்கொலைக் குண்டுதாரி ஒருவரினால் கொலை செய்யப்பட்டார் என இலங்கைக்கான முன்னாள் நோர்வே சமாதானப் பேச்சுவார்த்தையாளர் எரிக் சோல்கெய்ம் தெரிவித்திருக்கிறார். அவர் தனது பல டுவிட்டர் பதிவுகளில் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

சோல்கெய்ம் தனது பதிவில், தான் புலிகளின் சமாதானப் பேச்சுவார்த்தையாளர் அன்ரன் பாலசிங்கத்துடன் நடத்திய உரையாடல்களின் போது அவர் இந்த விடயத்தை ஏற்றுக் கொண்டதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

சோல்கெய்ம் தனது பதிவில், "பிரபாகரனுடனான தனது தனிப்பட்ட உரையாடல்களின் போது ராஜீவ் காந்தியை கொல்லும்படி தான் உத்தரவிட்டதை அவர் ஏற்றுக் கொண்டதாக அன்ரன் பாலசிங்கம் என்னிடம் கூறினார். இந்தத் தாக்குதலுக்கு யார் உத்தரவிட்டிருப்பார் என்பதில் பாலாவுக்கு சிறிதளவும் சந்தேகமில்லை. பாலா ஒருபோதும் என்னிடம் பொய் சொன்னது கிடையாது. அவர் பொய் சொல்வதற்கான எந்தக் காரணத்தையும் நான் இதில் காணவில்லை" எனக் கூறியுள்ளார்.

மேலும் சோல்கெய்ம் கூறுகையில், "கடைசி யுத்த நேரத்தில் பொதுமக்கள் அப்பிரதேசத்தை விட்டு வெளியேறிச் செல்வதை பிரபாகரன் ஏற்க மறுத்ததுக்காக அவரை நான் குற்றம் சாட்டுகிறேன். இதன் காரணமாகவே இலங்கை இராணுவம் எறிகணை வீசியும் குண்டு வீசியும் பொதுமக்களைக் கொல்லும் நிலை ஏற்பட்டது. சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு சரியான ஆலோசனைகளைக் கூறி ஏற்க வைக்கும் அதிகாரம் மத்தியஸ்தர்களுக்கு இருக்க வேண்டுமென நான் விரும்புகிறேன்" எனவும் தெரிவித்துள்ளார். சர்வதேச சமூகத்தில் எவரும் தனித் தமிழீழ அரசுக்கு உடன்படவில்லை என்றும் அவர் கூறினார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், "நாங்களோ, இந்தியாவோ, அமெரிக்காவோ, சீனாவோ, ஐரோப்பிய ஒன்றியமோ அல்லது வேறு எந்தவொரு நாடுமோ தனியானதொரு தமிழ் அரசை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. சமாதானப் பேச்சுவார்த்தையின் நோக்கம் இலங்கையில் ஒரு சமஷ்டித் தீர்வைக் கொண்டு வருவதாகும். பெரும்பான்மையான தமிழ் மக்கள் அதையிட்டு திருப்தியடைந்திருப்பார்கள்" என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

"கண்மூடித்தனமாக பொதுமக்கள் மீது குண்டு

**தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க...**

# அதிகரிக்கும் பொருளாதார ஏற்றத்தாழ்வு: நாம் என்ன செய்யப்போகிறோம்?

உலகில் பொருளாதார வளர்ச்சி மிக வேகமாக அதிகரிக்க, அதிகரிக்க அதற்கேற்ப ஏற்றத்தாழ்வுகளும் அதிகரித்து வருகின்றன. ஒரு சாராரிடம் மட்டும் செல்வம் குவிந்துகொண்டிருக்க, மற்றவர்கள் ஏழ்மையை நோக்கி தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அதிலும் குறிப்பாக கடந்த 40 ஆண்டுகளில் பொருளாதார ஏற்றத்தாழ்வு மிகப் பெரிய அளவில் உருவாகி இருக்கிறது. ஏன் உலகம் இத்தகைய ஏற்றத்தாழ்வுமிக்கதாக மாறியிருக்கிறது? ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுவதற்கு மனிதர்களுக்கு இடையிலான உடல் வலிமை மற்றும் அறிவுத்திறன் போன்றவற்றில் நிலவும் இயற்கையான வேறுபாடுகள் மட்டும்தான் காரணமா? அல்லது, சமூக, பொருளாதார அமைப்பில் உள்ள சிக்கல்கள் காரணமா? பேசுவோம்.

1. ஏற்றத்தாழ்வுகளின் தோற்றம்: பிற உயிரினங்களிடத்திலும் ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன. ஆனால் அவை உடல் பலத்தினால் ஏற்பட்டவை. மனிதர்கள்போல் உபரி உற்பத்தி, சொத்துரிமை என்ற வாழ்வியல் முறை பிற உயிரினங்களிடத்தில் இல்லாததால் அவையிடத்தில் ஏற்றத்தாழ்வுகள் தொடர்ந்து நீடிப்பதற்கோ, பெருகுவதற்கோ வாய்ப்பில்லை. மனித சமுதாயம் ஒரு காலகட்டம் வரை அப்படித்தான் இருந்தது. காய், கனிகளை சேகரித்து உண்ட காலத்திலும், விலங்குகளை வேட்டையாடி உணவாக்கிய காலகட்டத்திலும் ஏற்றத்தாழ்வுகள் இல்லை. அதனால்தான் அப்போது அரசும், மதங்களும் தோன்றவில்லை.

விவசாயம் தோன்றிய பின் உபரி உற்பத்தி உருவாகியதால் அதை சேமிக்க வேண்டிய தேவை உருவானது. விளைவாக, சொத்துரிமை தோன்றியது.



இருந்தபோதிலும், உபரி என்பது தானியமாக, கால்நடைகளாக இருந்த வரை ஏற்றத்தாழ்வுகள் மிகவும் குறைவாகவே இருந்தன. எப்போது மனித குலம் நாடோடி வாழ்க்கையிலிருந்து குடியமைவு என்கிற வாழ்க்கை நிலைக்கு மாறியதோஅப்போதுதான் சேமிப்புக்கான தேவை அதிகரித்தது. இதனால் அதிக அளவில் உபரி உருவாக்கப்பட்டது. அதன் நீட்சியாக நிலவுடைமையும் உழைப்புப் பிரிவினையும் தோன்றி ஏற்றத்தாழ்வுகள் பெருக ஆரம்பித்தன.

**பேராசிரியர் ரு. பாலசுப்ரமணியன்**

2. நல அரசும் நவதாராளமயமாக்கலும்: அறிவியல் கண்டுபிடிப்புகள் பொருளாதார வளர்ச்சியின் வேகத்தை பல மடங்கு அதிகரித்தது. ஆனால் அதன் பலன்கள் அனைத்தும் அதிகாரத்தில் இருந்தவர்களிடமும், பணபலம் கொண்டிருந்தோரிடமுமே குவிந்தது. இந்தச் சூழல் தீவிரமடையவும் பொதுவுடமை சித்தாந்தம் தோன்றுகிறது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு கம்யூனிச சித்தாந்தத்தின் தாக்கம் பரவலாக இருந்தது. அதன் பரவலைத் தடுக்கும் நோக்கில் முதலாளித்துவ அரசுகள், செல்வந்தர்கள் மீது அதிகமான வரிகள் விதித்து அரசுச் செலவுகள் மூலம் ஏழை, எளியோர்களுக்கான நலத் திட்டங்களைத் தீவிரமாகச் செயல்படுத்தும் வகையில் மக்கள் நல அரசுகளைக் (welfare state) கட்டமைத்தது. இந்தக் காலகட்டத்தில்தான் மக்களாட்சி முறையும், தொழிற்சங்களின் வளர்ச்சியும் நிகழ்ந்தது. இந்த மாற்றங்கள் ஏற்றத்தாழ்வுகள் பெருகுவதைப் பெருமளவு மட்டுப்படுத்தின.

ஆனால், 1980 இற்குப் பின், உலக முதலாளியத்திற்கு நெருக்கடி ஏற்பட்டது. அதன் காரணமாக மக்கள் நல அரசுகள் புறந்தள்ளப்பட்டு, நவதாராளமயமாக்கல் (Neo-liberalism) கொள்கைகள் அமுலாக்கப்பட்டன. கட்டற்ற சந்தைப் பொருளாதாரம், குறைந்தபட்ச அரசு (minimal state), தனியார்மயமாக்கல் மற்றும் உலகமயமாதல் கொள்கைகள் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டன. அவை தொழிற்சங்கங்களை பலவீனப்படுத்தின.இதனால் உழைப்புச் சந்தையில்

தொழிலாளர்களின் பேரத்திறன் குறைந்தது. அதேசமயம், பெருநிறுவனங்களில் உயர்பதவி வகிப்போரின் ஊதியம் பல்கிப் பெருகியது. பொருள் உற்பத்தியின் மூலம் இலாபம் ஈட்டும் மெய்யான பொருளாதாரத்திற்கும் (Real economy), பணத்தை வைத்தே பணம் பெருக்கும் நிதிப் பொருளாதாரத்திற்குமான (financial economy) இடைவெளி மிகப் பெரிய அளவில் விரிவடைந்தது. இது ஏற்றத்தாழ்வுகள் பெருகியதற்கான முக்கியமான காரணியாகும்.

3. புள்ளிவிவரங்கள் சொல்வதென்ன?: 1980 இற்குப் பிறகு உலகின் அனைத்துப் பகுதிகளிலுமே பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளது என்கிறார் ஏற்றத்தாழ்வுகள் குறித்து விரிவான ஆய்வுகள் செய்துள்ள பிரெஞ்சுப் பொருளியலாளர் தோமஸ் பிக்கெட்டி (Thomas Piketty). 1990 முதல் 2015 வரையான காலத்தில் இந்தியா, சீனா உட்பட உலகின் 71 சதவீத மக்கள் தொகையைக் கொண்டுள்ள நாடுகளில் ஏற்றத்தாழ்வுகள் பெருமளவு அதிகரித்துள்ளது. இந்தியாவை எடுத்துக் கொண்டால், அதன் மொத்த தேசிய வருமானத்தில் 55 சதவீதம், இந்திய மக்கள் தொகையில்10 சதவீதத்தினரிடம் சென்றடைகிறது. மீதமுள்ள 45 சதவீத வருமானம் 90 சதவீத மக்களால் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. உதாரணமாக, இந்தியாவின் மக்கள் தொகை 100 பேர் எனவும் தேசிய வருமானம் 1,000 ரூபாய் என்றும் வைத்ததுக் கொள்வோம். இதை சமமாகப் பங்கிட்டால் ஒரு நபருக்கு 10 ரூபாய் கிடைக்கும். ஆனால், தற்போதுள்ள நிலையின்படி, பொருளாதாரக் கட்டமைப்பில் உயர் நிலையில் உள்ள 10 பேருக்கு, நபர் ஒருவருக்கு 55 ரூபாய் வீதம் 550 ரூபாய் கிடைக்கிறது. மீதமுள்ள 90 பேருக்கு நபர் ஒருவருக்கு 5 ரூபாய் வீதம் மொத்தமாக 450 ரூபாய் மட்டுமே சென்றடைகிறது.

இந்தியா சுதந்திரமடைந்தபோது, வருமான அடிப்படையில் உச்சத்திலிருந்த 1 சதவீதத்தினரின் மொத்த வருவாய், நாட்டின் மொத்த வருவாயில் 20 சதவீதமாக இருந்தது. சுதந்திரத்திற்குப் பிந்தைய முப்பதாண்டுக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட நாட்டுடைமையாக்கல், பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகள் அதிகரிப்பு போன்ற பொருளாதாரக் கொள்கைகளினால் பொருளாதார ஏற்றத்தாழ்வு குறைந்தது. இதனால், 1980 களின் தொடக்கத்தில், வருமான அடிப்படையில் உச்சத்திலிருந்த 1 சதவீதத்தினரிடம் குவிந்து கொண்டிருந்த நாட்டின் மொத்த வருவாயின் பங்கு 6 சதவீதமாகக் குறைந்தது. ஆனால், 1980 இற்குப் பின் பின்பற்றப்பட்ட நவதாராளமயமாக்கல் கொள்கைகளினால் பொருளாதார வளர்ச்சி அதிகரித்தபோதிலும் அவ்வளர்ச்சியினால் செல்வம் படைத்தவர்களே அதிகம் பலன் பெற்றனர்.

இதனால், வருமான அடிப்படையில் உச்சத்திலிருந்த 1 சதவீதத்தினரிடம் குவிந்து கொண்டிருந்த நாட்டின் மொத்த வருவாயின் பங்கு 22சதவீதமாக உயர்ந்து, இந்தியாவின் ஏற்றத்தாழ்வுகள் வரலாறு காணாத அளவை எட்டியுள்ளது என்கிறது உலக ஏற்றத்தாழ்வு அறிக்கை 2018. 1980 இற்குப் பிறகு ஏறத்தாழ அனைத்து நாடுகளிலுமே பொது மூலதனம் மிகப்பெருமளவில் தனியார் மூலதனமாக மாற்றப்பட்டுள்ளது தெளிவாகிறது. மொத்தத்தில், பரந்துபட்ட பொருளாதார வளர்ச்சி நிகழ்ந்திருந்தபோதிலும், பொதுச் செல்வம் தனியார் செல்வமாக மாற்றப்பட்டதால் அரசுகள் ஏழ்மையுற்றன. இதன் காரணமாக அரசுகள், ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கும் மக்கள் நல அரசுகளாகச் செயல்படும் பொருளாதார வலிமையை இழந்துவிட்டன என்கிறது அவ்வறிக்கை.

4. ஏன் கவலைப்பட வேண்டும்?: பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் பல்வேறு சமூக, பொருளாதார சிக்கல்களுக்கு வழிவகுக்கின்றன. உதாரணமாக, ஏற்றத்தாழ்வுகள் அதிகமுள்ள நாடுகளில் மக்களுக்கிடையிலான பரஸ்பர நம்பிக்கை குறைந்து விடுவதுண்டு (Trust deficit). இதனால் பரிவர்த்தனைச் செலவுகள் (transaction cost) அதிகரித்து வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. ஏற்றத்தாழ்வுகள் அதிகரிப்பதால் உற்பத்தித்திறனும் அதன் தொடர்ச்சி யாக பொருளாதார வளர்ச்சியும் பாதிக்கப்படும் என்கிறது 2020ல் வெளியான உலக வங்கியின் உலக உற்பத்தித்திறன் பற்றிய ஆய்வுநூல். ஏற்றத்தாழ்வுகளினால் சமூகப் பதற்றம் மற்றும் அரசியல் நிலையின்மை அதிகரிப்பதுடன் மனிதவளத் திரட்டல் குறையவும் வாய்ப்புள்ளது. தானியங்கிமயமாதல், கொரோனா நோய்த்தொற்று மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவற்றால் ஏற்றத்தாழ்வுகள் மேலும் அதிகரிக்கவே வாய்ப்புள்ளதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

காலநிலை மாற்றத்தினால், ஏழை நாடுகளின் பொருளாதாரம் அதிகமாகப் பாதிக்கப்பட்டதன் காரணமாக உலகளாவிய ஏற்றத்தாழ்வு 25 சதவீதம் அதிகரித்துள்ளது. அனைவருக்குமான இலவசக் கல்வி, சுகாதாரம், குழந்தைகள் மற்றும் பெண்கள் மேம்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிய பொதுச் சேவைகள், சமூகப் பாதுகாப்பு, வேலை வாய்ப்புகள், வரி உயர்வுகள் மூலம் வருவாய் மறுபங்கீடு போன்ற சமத்துவத்தை ஊக்குவிக்கும் கொள்கைகள், திட்டங்களால் மட்டுமே ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்து, பரந்துபட்ட வளர்ச்சியை உறுதி செய்ய முடியும். ஏற்றத் தாழ்வற்ற சமநிலைச் சமுதாயத்தை நோக்கி நகர்வதே நாகரிக சமூகத்தின் பண்பாகும். நாம் என்ன செய்யப்போகிறோம்?

---

**11ம் பக்கத்தொடர்ச்சி…**

வீசியும், எறிகணை வீசியும் ஆயிரக்கணக்கில் அவர்களைக் கொன்றதற்கு உண்மையிலேயே இலங்கை அரசும் இராணுவமுமே பொறுப்பு. ஆனால் அதேநேரத்தில் நாம் அதிலிருந்து தப்ப கூறிய வழிமுறையை பிரபாகரன் நிராகரித்தார் என்ற உண்மையும் அதில் இருக்கிறது” என்று கூறிய சோல்கெய்ம்,

**தவறான இராணுவ தந்திரோபாயம் காரணமாக புலிகள் கிழக்கையும் இழப்பார்கள், வடக்கைக் கூட இழக்க வேண்டி வரலாம் என அன்ரன் பாலசிங்கம் தன்னிடம் எதிர்வு கூறியிருந்ததாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.**

**முன்பக்கத் தொடர்ச்சி...**

பண்டாரநாயக்க தலைமையில் ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசாங்கம் ஒன்று ஏற்பட்ட பின்னர், பண்டாரநாயக்க தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி "பண்டா – செல்வா ஒப்பந்தம்" என்ற பெயரில் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தினார். அந்த ஒப்பந்தப் பிரகாரம் வடக்கு கிழக்கில் தமிழ் மக்களால் நிர்வகிக்கப்படும் பிராந்திய சபைகள் உருவாக இருந்தன. ஆனால் ஐ.தே.க. செய்த எதிர்க் குழப்ப வேலைகளால் ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது.

1965 தேர்தலின் பின்னர் டட்லி சேனநாயக்க தலைமையிலான ஐ.தே.க. ஏழு கட்சி கூட்டரசாங்கம் ஒன்றை அமைந்தது. அந்த அரசு அமைவதற்கு தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சிகளின் ஆதரவும் தேவையாக இருந்ததால், தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வாக 'மாவட்ட சபைகள்' என்ற அமைப்பை உருவாக்குவதாக டட்லி தமிழரசுக் கட்சித் தலைவர் செல்வநாயத்துடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்தார். ஆனால் அவர் வாக்குறுதி அளித்தபடி கடைசி வரை மாவட்ட சபைகளை அமைக்காமல் தமிழரசுக் கட்சியை ஏமாற்றிவிட்டார்.

1970இல் சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான 'மக்கள் முன்னணி' அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அமைந்தது. இந்தக் காலகட்டத்தில் தமிழரசுக் கட்சி சிறீமாவோ அரசுக்கு எதிராக பல சட்ட மறுப்புப் போராட்டங்களை நடத்தியதுடன், 1976இல் வட்டுக்கோட்டையில் மாநாடு கூடி தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாக 'தனித் தமிழீழம்' என்ற கோரிக்கையையும் முன் வைத்தது. தமிழரசுக்கட்சியின் இந்தத் தீவிரவாதப் போக்கு தமிழ் இளைஞர்களை வன்முறைப் பாதையில் செல்லத் தூண்டிவிட்டது. முதலாவது அரசியல் கொலையாக யாழ் மாநகர முதல்வர் அல்பிரட் துரையப்பா தமிழ் இளைஞர்களால் சுட்டுக் கொல்லப்பட்டதுடன், தொடர்ந்தும் பல கொலைகள் நிகழ்த்தப்பட்டு, கொலைக் கலாச்சாரம் தமிழர் அரசியலில் துவக்கி வைக்கப்பட்டது.

தனித் தமிழீழத் தீர்மானத்தின் காரணமாக அடுத்து வந்த 1977 பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி வடக்கு கிழக்கின் 18 தொகுதிகளிலும் வெற்றி பெற்றதுடன், இலங்கை நாடாளுமன்றத்தின் பிரதான எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தையும் பெற்றது. ஆனால் தேர்தலின் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சுருதி மாறத் தொடங்கியதுடன், தமிழீழத் தீர்மானம் நிறைவேற்றிய அவர்கள் 1977இல் பதவிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐ.தே.க. அரசியடம் சோரம்போய் எதுவித அதிகாரமும் அற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைகளை ஏற்கும் அளவுக்குச் சென்றனர். ஆனால் ஜே.ஆர். அரசு மாவட்ட அபிவிருத்திச் சபைகளைக் கூட இயங்க அனுமதிக்கவில்லை.

தமிழ் தலைமையின் இந்தத் துரோகமும், தொடர்ந்து தமிழர்களை ஏமாற்றி வந்த ஐ.தே.க. தலைமையுடன் தமிழ்த் தலைமை தொடர்ந்தும் கூடிக்குலாவியதும், தமிழ் இளைஞர்கள் மத்தியில் விரக்தியையும் கோபத்தையும் தூண்டிவிட்டது. எனவே அவர்கள் படிப்படியாக ஜே.ஆர் அரசுக்கு எதிரான ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபடத் துவங்கினர். ஆனால் ஜே.ஆர். அரசு நிலைமையை உணர்ந்து தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக அமெரிக்காவின் தலைமையிலான மேற்குலகின் உதவியுடன் இராணுவ ஒடுக்குமுறையைத் தமிழ் மக்கள் மேல் ஏவிவிட்டது. அதன் காரணமாக இலங்கை அரசுக்கும் தமிழ் இளைஞர்களின் ஆயுத இயக்கங்களுக்கும் இடையில் முழு அளவிலான போர் ஆரம்பமானது.

அந்தக் காலகட்டத்தில் உலக அளவில் அமெரிக்க – சோவியத் வல்லரசுகளுக்கிடையில் 'பனிப்போர்' நிலவியது. இந்தப் போரில் இலங்கையின் அயல்நாடான இந்தியாவில் இருந்த இந்திராகாந்தி அரசாங்கம் தன்னை சோவியத் அணியில் இணைத்துக் கொண்டது. அதன் காரணமாக இலங்கையில் அமெரிக்கா காலூன்றுவதற்கு ஜே.ஆர். அரசு உதவி புரிவதை இந்திராகாந்தி அரசு விரும்பவில்லை. எனவே ஜே.ஆர். அரசை வழிக்குக் கொண்டுவர எண்ணிய இந்திய அரசு தமிழ் இளைஞர்களின் ஆயுத நடவடிக்கைகளை ஒரு துருப்புச் சீட்டாகப் பயன்படுத்த எண்ணி அவர்களுக்கு இந்திய மண்ணில் ஆயுதப் பயிற்சி வழங்கியதுடன், ஆயுதங்கள், பணம் உட்பட பல வழிகளிலும் உதவியது.

இந்தியாவின் இந்த நடவடிக்கையால் ஆடிப்போனது ஜே.ஆர். அரசு. அமெரிக்காவாலோ அல்லது மேற்குலகாலோ ஜே.ஆர். அரசைக் காப்பாற்ற முடியவில்லை. வேறு வழியின்றி இந்தியாவின் காலில் விழுந்து சரணாகதி அடைந்தது ஜே.ஆர். அரசு. அதன் விளைவாக உருவானதே 1987இல் செய்து கொள்ளப்பட்ட இந்திய – இலங்கை உடன்படிக்கை. அந்த உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கையின் அரசியல் அமைப்பில் செய்யப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டம் பெற்றெடுத்த குழந்தைகளே இந்த மாகாண சபைகள்.

இலங்கை தமிழ் தலைமைகள் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக ஆரம்பத்தில் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையையும், பின்னர் சமஸ்டி கோரிக்கையையும், அதன் பின்னர் தனிநாட்டுக் கோரிக்கையையும் முன்வைத்தன. ஆனால் அந்தக் கோரிக்கைகள் எவற்றையும் அவையால் அடைய முடியவில்லை. மறுபுறத்தில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக பண்டா – செல்வா ஒப்பந்தம், டட்லி – செல்வா ஒப்பந்தம், ஜே.ஆர். – அமிர்தலிங்கம் ஒப்பந்தம் என பல ஒப்பந்தங்கள் இலங்கை அரசுகளுக்கும் தமிழ்த் தலைமைகளுக்கும் இடையில் உருவான போதும் அவையும் நடைமுறைப் படுத்தப்படவில்லை.

முன்வைத்த கோரிக்கைகளை அடைய முடியாமலும், எழுதிய ஒப்பந்தங்கள் நடைமுறைப்படுத்தப்படாமலும் இருந்த சூழலில், உருவான ஆயுதப் போராட்டம் மத்தியில் உருவான இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஒன்றே தமிழ் மக்களுக்கு நம்பிக்கை அளிக்கக்கூடியதாக இருந்தது. தோல்வியுற்ற முன்னைய ஒப்பந்தங்களுக்கும் இந்த ஒப்பந்தத்துக்கும் உள்ள அடிப்படையான வித்தியாசம் என்னவெனில், முன்னைய ஒப்பந்தங்கள் யாவற்றிலும் இலங்கை அரசும் தமிழர் தரப்புமே கைச்சாத்திட்டன. அதனால் இலங்கை

அரசுகள் ஒப்பந்தத்தை மதிக்காமல் ஒருதலைப்பட்சமாக அதை முறித்து ஏமாற்றக் கூடியதாக இருந்தது. ஆனால் இந்திய ~ இலங்கை ஒப்பந்தத்தைப் பொறுத்தவரை இலங்கை அரசுடன் இலங்கைத் தமிழர்கள் சார்பாக பலம் வாய்ந்த இந்திய அரசே கைச்சாத்திட்டது. எனவே இந்தியாவை இலங்கை ஏமாற்றுவது சுலபமான விடயமல்ல.

வரலாற்றில் இலங்கைத் தமிழ் மக்களுக்குக் கிடைத்த பொன்னான வாய்ப்பு இது. இதை இலங்கை தமிழ் அரசியல் தலைமைகள் நன்கு பயன்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் அவை என்ன செய்தன?

போராட்டக் களத்தில் நின்ற பிரதான இயக்கமான விடுதலைப் புலிகள் ஒப்பந்தத்தை நிராகரித்ததுமல்லாமல், பிரேமதாச தலைமையிலான ஐ.தே.க. அரசிடம் ஆயுதங்களும் பணமும் வாங்கிக்கொண்டு இந்தியாவுடன் யுத்தத்துக்குப் போனார்கள். அது மாத்திரமின்றி, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியையும் படுகொலை செய்தார்கள். அதன் மூலம் இந்திய அரசை இலங்கைத் தமிழர் பிரச்சினையிலிருந்து எட்ட நிற்க வைத்தனர். அவர்களது இந்த நடவடிக்கை ஐ.தே.க. அரசுக்கும் அதன் ஏகாதிபத்திய எஜமானர்களுக்கும் கிடைத்த மாபெரும் வெற்றி. புலிகளின் மேற்கத்திய சார்பு, சியோனிச இஸ்ரேலிய சார்பு போக்கே அவர்களை இவ்வாறெல்லாம் செய்யத் தூண்டியது.

சரி, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்தவர்கள், 2000 ஆண்டில் சந்திரிக அரசாங்கம் கொண்டு வந்த, ஏறத்தாள சமஸ்டியை ஒத்த அதிகாரப் பகிர்வுத் திட்டத்தையாவது ஆதரித்தார்களா? இல்லை, அதையும் புலிகள் ஐ.தே.கவுடனும் இதர சிங்கள இனவாத இயக்கங்களுடனும் சேர்ந்து நடைமுறைப்படுத்த விடாமல் குழப்பியடித்தார்கள். இவ்வளவையும் செய்துவிட்டு இன்று மாகாண சபை பறிபோகப் போகிறதே என்று ஒப்பாரி வைப்பதில் என்ன பிரயோசனம்? இதைத்தான் சொல்வது, "பட்டு வேட்டிக்கு ஆசைப்பட்டு இருந்த கோவணத்தையும் இழந்த கதை" என்று.

தமிழ்த் தலைமைகளின் வங்குரோத்து அரசியல் இப்படியிருக்க, இன்றைய அரசுக்கு தமிழ் மக்கள் சம்பந்தமான பாரிய கடமை ஒன்றுண்டு. அதாவது அவர்களது பிரச்சினைக்கு இன்றைய சூழலில் முழுமையான தீர்வு காண்பது சாத்தியமில்லை என்றாலும், இருக்கின்ற ஒரேயொரு அதிகாரப் பகிர்வுத் தீர்வான மாகாண சபை முறைமையைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும். ஏனெனில், மாகாண சபை முறை தமிழ் பகுதிகளுக்கான இன ரீதியிலான அதிகாரப் பகிர்வு மட்டுமல்ல. அது ஒன்பது மாகாணங்களிலும் இயங்குவதால் பிராந்திய அடிப்படையிலான சிறந்த அதிகாரப் பகிர்வும் கூட. எனவே அரசாங்கம் அதில் கை வைக்குமாக இருந்தால் தமிழ் மக்களின் முற்றுமுழுதான நம்பிக்கையை இழந்து அவர்களின் வெறுப்பைச் சம்பாதிப்பதுடன், அரசாங்கத்தின் தற்கொலை முயற்சியாகவும் அமைந்துவிடும்.

இந்த அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றது தனியே சிங்கள இனவாத வாக்குகளால்தான் என்ற ஒரு எண்ணம் சில பேரினவாத சக்திகளிடம் இருக்கின்றது. சிங்கள முற்போக்கு – ஜனநாயக சக்திகளினதும், தமிழ் – முஸ்லீம் மற்றும் மலையகத் தமிழ் மக்களினதும் கணிசமான வாக்குகளும் இந்த அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற உதவியிருக்கிறது என்பதை அரச தலைவர்கள் மறந்துவிடக்கூடாது. எனவே அவர்களின் ஆதரவு மூலம் பெற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வைத்துக்கொண்டு அவர்களது தலையில் மண்ணள்ளிப் போட நினைத்தால் அதற்கு வரலாறு தகுந்த பாடம் புகட்டத் தவறாது என்பதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனவே, தற்போது மாகாண சபைகளின் எதிர்காலம் குறித்து சில இனவாத சக்திகளால் கிளப்பப்பட்டிருக்கும் குழப்ப நிலைக்கு ஒரு முடிவு கட்டுவதானால் ஜனாதிபதியாகவும் பிரதமராகவும் பதவி வகிக்கும் ராஜபக்சாக்கள் மாகாண சபைகளின் எதிர்காலம் குறித்து தங்கள் அரசின் நிலைப்பாட்டை நாட்டு மக்களுக்குப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.

**5ம் பக்கத்தொடர்ச்சி...**

அரசு உழைத்ததன் அங்கீகாரமாக ஐ.நா. இந்த விருதை வழங்கியுள்ளது.

மாநிலத்தில் உள்ள அடிப்படை சுகாதார மையம் முதல் அரசு மருத்துவமனைகள் வரை வாழ்க்கை முறை மாற்றத்தால் வரும் நோய்களான இதயநோய்கள், நீரிழிவு, நீரிழிவில் அனைத்து வகைகளுக்கும், ரத்த அழுத்தம், உடல் பருமன், புகைப்பழக்கம், குடிப்பழக்கம், புற்றுநோய், போதைமருந்து பழக்கம் என அனைத்துக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றன.

நுரையீரல் தொடர்பான நோய்களுக்கான சிகிச்சை, புற்றுநோய் சிகிச்சைக்காக தனித்திட்டம், பக்கவாதத்தைக் கட்டுப்படுத்தும் திட்டம் போன்றவற்றை அறிமுகப்படுத்தினோம். அனைத்தையும் அங்கீகரித்து இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

தொற்று அல்லாத நோய்களைத் தடுப்பதில் தீவிரமான அக்கறை காட்டியதால்தான் எங்களால், கொரோனா காலத்தில் பெரும் உயிரிழப்பு வராமல் தடுக்க முடிந்தது" எனத் தெரிவித்தார்.

கேரள அரசு கொரோனா வைரஸ் பரவலைச் சிறப்பாகக் கட்டுப்படுத்தியதற்காக கௌரவிக்கும் வகையில், கடந்த ஜூன் மாதம் மாநில சுகாதாரத் துறை அமைச்சர் ஷைலஜா பேசுவதற்காக சிறப்பு அழைப்பாளராக ஐ.நா. அழைப்பு விடுத்திருந்தது. ஐ.நா.வின் பொதுச்சேவை நாளில் பேசுவதற்கு உலக அளவில் 6 பேர் மட்டுமே தேர்வு செய்யப்பட்டு இருந்தனர். அதில் கேரள அமைச்சர் ஷைலஜாவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகையே அச்சுறுத்திவரும் கொரோனா வைரஸால் இதுவரையில் உலக அளவில் 3.25 கோடி பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 9.89 லட்சம் பேர் உயிரிழந்தனர். கொரோனாவுக்குத் தடுப்பு மருந்து கண்டுபிடிக்கும் பணியில் பல்வேறு நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன, தடுப்பு மருந்துகளும் பல்வேறு சோதனைக் கட்டங்களில் இருக்கின்றன.

உலக அளவிலான கொரோனா பாதிப்பில் இந்தியாவில் மட்டும் 18 சதவிகித பாதிப்பு இருப்பதாக கூறப்படுகிறது. இந்தியாவில் தமிழகம், ஆந்திரா, கர்நாடகா, உத்தரப்பிரதேசம் உள்பட 10 மாநிலங்களில் தொற்று பரவல் தீவிரமடைந்து உள்ளதாக இந்திய மத்திய சுகாதாரத்துறை தெரிவித்து உள்ளது. கொரோனாவின் வீரியம் குறையாத நிலையில் ஊரடங்கைத் தளர்த்த வேண்டாமென இந்தியாவிற்கு உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# கோவிட்–19 இற்கான இலங்கையின் எதிர்வினை விரைவானது, தீர்க்கமானது, ஒருங்கிணைக்கப்பட்டது: உலக சுகாதார நிறுவனம்

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவின் வலுவான தலைமையின் கீழ், சுகாதார அமைச்சு மற்றும் உலக சுகாதார நிறுவனம் (WHO) ஆகியவற்றின் தொழில்நுட்ப வழிகாட்டல்களுடன் கூடிய முழுமையான சமூக அணுகுமுறையைப் பயன்படுத்தி, கோவிட்–19 தொற்றுநோய் தொடர்பான இலங்கையின் எதிரவினை, விரைவானது, தீர்க்கமானது, ஒருங்கிணைக்கப்பட்டது என உலக சுகாதார நிறுவனத்தால் வெளியிடப்பட்ட களநிலை ஆய்வுகளின் மாதாந்த தொகுப்பு கூறுகின்றது.

‘கோவிட்–19: நாடுகளில் உலக சுகாதார அமைப்பின் நடவடிக்கை|ஓகஸ்ட் 2020’ (COVID-19: WHO’s Action in Countries | August 2020) என்ற தலைப்பிலான களநிலை ஆய்வுகளின் மாதாந்த தொகுப்பில் இலங்கை, பூட்டான், லெபனான், மலேசியா, மொரோக்கோ, மியன்மார், ரஷ்யா உள்ளிட்ட பல நாடுகள் இடம்பெற்றுள்ளன. செப்டம்பர் 9 அன்று வெளியிடப்பட்ட அறிக்கை, ‘கோவிட்–19 தொற்றுக்கு திறம்பட பதிலளிக்கும் ஒரு வலுவான சுகாதார ஒழுங்கு முறை’யை இலங்கை கொண்டுள்ளது என்று கூறியது. சீனாவின் வூஹானில் கோவிட்–19 இன் தோற்றம் பெற்றதில் இருந்து சுகாதார அமைச்சு இலங்கை ஜனாதிபதியிடமிருந்து பலமான அரசியல் ஆதரவைப் பெற்றுள்ளதாக அந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

“இலங்கை தனது கடந்த கால முதலீடுகள் மூலம் ஒரு வலுவான மற்றும் நெகிழ்திறன் கொண்ட சுகாதார ஒழுங்கு முறையைக் கட்டியெழுப்பி கோவிட்–19 தொற்று நோயை வெற்றிகரமாக கட்டுப்படுத்தியுள்ளது. ஜனவரி 27ந் திகதி, இலங்கையில் கோவிட்–19 இன் முதலாவது பாதிப்பு



கண்டுபிடிக்கப்பட்டது, அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி உடனடியாக தேசியளவில் கோவிட்–19 இற்கு எதிர்வினையாற்றுவதில் முன்னிலை வகித்தார். உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டல்களை ஓர் ஆதாரமாகப் பயன்படுத்தி, கோவிட்–19 இற்கு இலங்கையை தயார்நிலைப்படுத்தும் மற்றும் பதிலளிக்கும் திட்டத்தை சுகாதார அமைச்சு உருவாக்கியுள்ளது,” என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சமீபத்தில் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் பொதுச் சுகாதாரம் மற்றும் சமூக நடவடிக்கைகளை பின்பற்றுவது குறித்தும் பரிசோதிக்கப்பட்டது என்று அந்த அறிக்கை கூறியுள்ளது.

“இந்த தேர்தல் எந்தவொரு அசம்பாவித நிகழ்வும் இல்லாமல் தீவு தழுவி வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இது இலங்கையின் மிகப்பெரிய வெற்றிக் கதைகளில் ஒன்றாகும், மேலும் இந்த கொடிய வைரஸைக் கட்டுப்படுத்த நாடு எவ்வளவு தூரம் முன்னே வந்துள்ளது என்பதை விளக்குகிறது”, என்று அந்த அறிக்கை மேலும் தெரிவித்துள்ளது.

இலங்கை பற்றிய கருத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: “தொற்றைக் கண்டறியவும், தனிமைப்படுத்தவும், பரிசோதனை செய்யவும், சிகிச்சையளிப்பதிலும், தொடர்புகளை கண்டறிவதிலும், தனிமைப்படுத்தி, தொற்றுக்கு உள்ளானவர்களை தனிமைக் காப்பகத்தில் வைப்பதிலும் அரசாங்கம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டுள்ளது. இந்தத் துறையில் உள்ள வெற்றிகளைப் பாதுகாப்பதில் தீவிர கவனம் செலுத்துவதுடன், இயற்கைப் பேரழிவுகள், டெங்கு மற்றும் உருவெடுக்கும் பிற அச்சுறுத்தல்கள் போன்ற பொது சுகாதார அவசரநிலைகளையும் மற்றும் எதிர்காலத்தில் ஏற்படும் தொற்றுநோய்களையும் கையாள்வதற்கு, அதன் எதிர்காலத் தயார்நிலையை மேலும் வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகளினை ஆராய்வதைத் தொடர்வதும் முக்கியமாகும்.

வலுவான அரசியல் தலைமை, அர்ப்பணிப்புக் கொண்ட திறன்மிகு சுகாதார தொழிலாளர்கள், சக்திகொண்ட சமூகங்கள் மற்றும் அபிவிருத்திப் பங்காளிகளின் ஒருங்கிணைந்த ஆதரவு மூலம், நாடு எதிர்கால சுகாதார அவசரநிலைகளுக்கு சிறந்த தயாரிப்புக் கொண்டதாக ஈடுகொடுக்க முடியும்.”

ஏப்ரல் 2020 இல் நாட்டின் செயற்திட்டம் மற்றும் ஆதரவு (Country Strategy and Support) திணைக்களம் அவற்றை உருவாக்கத் தொடங்கியதில் இருந்து, இந்த வெளியீடு நாடுகளின் களநிலை ஆய்வுகளின் ஐந்தாவது பதிப்பு ஆகும்.

இதுவரை 49 கோவிட்–19 நாட்டு களநிலை ஆய்வுகள் உலக சுகாதார நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

**9ம் பக்கத்தொடர்ச்சி...**

தெரிவித்தது. இவ்வாறாக உலக நாடுகள் ஒற்றுமை இல்லாமல் மாறி மாறி குற்றம்சாட்டியதற்கு ஐ.நா., பொதுச்செயலர் அன்ரொனியோ கட்டெரஸ் (António Guterres) கண்டனம் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது: இந்த கொரோனா வைரஸ் பெருந்தொற்று பரவல் சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பிற்கு வைக்கப்பட்ட பரீட்சையாகும். இந்த பரீட்சையில் நாம் அடிப்படையிலேயே தோல்வியடைந்து விட்டோம். உலக நாடுகளில் இந்த தொற்று பாதிப்பை எதிர்க்கொள்ள தயாராக இல்லாததும், நாடுகளுக்கு இடையே ஒருங்கிணைப்பு, ஒற்றுமை இல்லாததுமே இதற்கு காரணம். இதேபோன்று ஒற்றுமையில்லாமலும், சீர்குலைந்து ஒழுங்கற்ற நிலையில் கொரோனாவை எதிர்கொண்டது போன்று உலக நாடுகள் பருவநிலை மாற்றத்தையும் எதிர்கொண்டால் விளைவுகள் மிகவும் மோசமாக இருக்கும் என நான் அஞ்சுகிறேன். இவ்வாறு அவர் கூறினார்.